Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, NOVEMBER 24, 2021

புதன்கிழமை நவம்பர் 24, 2021 | ஒளி: 07 கதிர்: 161 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

## ‘கல்யாணி பொன் நுழைவு’ இன்று திறந்து வைப்பு

இலங்கையில் முதற்றடவையாக உயர் தொழில்நுட்ப கேபிள்கள் மேல் அமைக்கப்பட்ட புதிய களனி பாலம் ‘கல்யாணி பொன் நுழைவு’ (Golden Gate Kalyani) எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்தப் பாலம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ ஆகியோரால் திறந்து வைக்கப்படுமென பெருந்தெருக்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.



### கிண்ணியாவில் துயரம்

# படகுப் பாதை கவிழ்ந்து கோரம்









- மாணவர்கள் உட்பட அறுவர் பலி
- ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மகனும் பலி
- சோகத்தில் மூழ்கியது கிண்ணியா
- வர்த்தக நிலையங்களுக்குப் பூட்டு
- ஆத்திரமடைந்த மக்கள் டயர்களை எரித்து எதிர்ப்பு

■ தமிழ் மிரர் திருகோணமலை நிருபர்கள்

திருகோணமலை, கிண்ணியா, குறிஞ்சாக்கேணி பகுதியில் படகுப் பாதை கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், பாடசாலை மாணவர்கள் உட்பட அறுவர் மரணமடைந்துள்ளனர். காயமடைந்த பலர் கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

நேற்று (23) திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளதாகவும் சம்பவம் இடம்பெற்ற தருணத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் பயணம் செய்திருந்ததாகவும் படகுப் பாதை உடைந்து விபத்துக்குள்ளான போது பலர் நீரில் மூழ்கினர் என்றும் சிலர் நீந்தி கரையைச் சேர்ந்துள்ளனர் என்றும் அறியமுடிகிறது.

இச்சம்பவத்தில், சப்ரியா (30 வயது) என்ற முன்பள்ளி ஆசிரியரும் அவரது முன்பள்ளியில் பயிலும் மகனான சேகுசகி (3 வயது) அடங்குகின்றனர். பாத்திமா சகிலா (6 வயது), பரீஸ் பஹி (6 வயது), பாத்திமா சிரின் (8 வயது) ஆகிய மாணவர்கள் உயிரிழந்துள்ளதோடு சேகு அப்துல் காதர் (70 வயது) என்ற வயோதிபரும் உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## சபையின் கவனத்துக்கு வந்தது

■ பா.நிரோஸ்

கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் இடம்பெற்ற படகுப் பாதை விபத்து தொடர்பில் சபையின் கவனத்துக்கு கொண்டுவந்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, விபத்தில் உயிரிழந்தவர்களுக்கான நட்டஈட்டை அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (23)



தொடர்ச்சி P2

## எதிர்க்கட்சியே அனுமதி வழங்கியது

குறிஞ்சாக்கேணியில் படகுப் பாதை சேவையை செயற்படுத்த அனுமதி வழங்கியது ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவுடன் இயங்கும் கிண்ணியா நகர சபையே என தெரிவித்த கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா, குறித்த துரதிர்ஷ்டவசமான சம்பவம் தொடர்பில் அரசாங்கத்துக்கு எதிராக குற்றஞ்சுமத்த



தொடர்ச்சி P2

## தௌபீக் எம்.பியின் வீட்டின் மீது தாக்குதல்

■ பைஷல் இஸ்மாயில்



திருகோணமலை, கிண்ணியா குறிஞ்சாக்கேணியில் இடம்பெற்ற படகுப் பாதை விபத்தில் மாணவர்கள் பலர் உயிரிழந்துள்ளனர். இதனையடுத்து கொதித்தெழுந்த மக்கள், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற

தொடர்ச்சி P2



## கோப்பாய் துயிலும் இல்லத்துக்கு முன் குழப்பம்

■ எம். றொசாந்த், என். ராஜ்

யாழ்ப்பாணம், கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு முன்பாக, நேற்று (23), துப்புரவுப் பணியில் ஈடுபடுகிறவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில், இராணுவத்தினரும் பொலிஸாரும் நடந்து கொண்டுள்ளனர்.

கோப்பாய் துயிலும் இல்லத்தை, இராணுவத்தினர் இடித்தழித்து, பாரிய இராணுவ முகாமை அமைத்து, நிலைகொண்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

### தமிழ் இராச்சியத்தின் தோற்றம் பற்றிய

## அரிய தமிழ்க் கல்வெட்டு



புகைபடர்ந்திருக்கும் இலங்கை தமிழரின் வரலாற்றுக்குப் புது வெளிச்சமூட்டும் வகையில், திருகோணமலையில் மிக அரிய தமிழ்க் கல்வெட்டு, பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் தலைமையிலான குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு. திருகோணமலை நகரில் இருந்து ஏறத்தாழ 50 கி.மீ தொலைவில்,

தொடர்ச்சி P2

### குட்டியாராச்சியை தாக்க முயற்சி

## ஆளும், எதிர்க்கட்சி சபையில் தள்ளுமுள்ளு

■ பா.நிரோஸ்

பெண்களை அவமதித்து பேசியதாகக் குற்றஞ்சுமத்தப்பட்ட ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சியை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தாக்க முயற்சித்ததால் சபையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்றைய (23)



பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்தில் பெண்களை அவமதிக்கும் வகையில் பாராளுமன்றத்தில் செயற்பட்டதாகக் கூறி, திஸ்ஸ குட்டியாராச்சியை சபாநாயகர் கண்டித்தார்.

மேலும் தனது உரைக்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும் எனவும் சபாநாயகர் கேட்டுகொண்டிருந்த போதிலும்,

தொடர்ச்சி P2

### ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

## ஜனவரி 12க்கு வழக்கு ஒத்திவைப்பு

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று, கத்தோலிக்க தேவாலயங்கள், ஐந்து நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தொடர் குண்டுவெடிப்பு தாக்குதல் தொடர்பில் பிரதிவாதிகள் 25 பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை, கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் எதிர்வரும் ஜனவரி 12 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

தொடர்ச்சி P2

### ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

## அனைவரையும் தண்டிப்பது அரசாங்கத்தின் பொறுப்பு

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரையும் தண்டிப்பது எமது அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனத் தெரிவித்த தொழிற்றுறை அமைச்சர் விமல் வீரவன்ச, அது கண்டிப்பாக எமது அமைச்சரவையிலோ, அலரிமாளிகையிலோ இரகசியமாக ஒன்று கூடியோ எடுக்கும் நடவடிக்கை அல்ல. அது நீதிமன்றம் ஊடாகவே முன்னெடுக்கப்படும் என்றார்.



தொடர்ச்சி P2



### புதிய அரசியலமைப்பு வரைவை

## சபையில் சமர்ப்பித்து விவாதிப்போம்

புதிய அரசியலமைப்பு வரைவு, பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும் என, பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ பாராளுமன்றத்தில், நேற்று (23) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### திஸ்ஸ குட்டியாராச்சிக்கு

## சபாநாயகர் கடும் எச்சரிக்கை

■ பா.நிரோஸ்

அதியுயர் சபையில் பெண்களை அவமதிக்கும் வகையில் செயற்பட வேண்டாம் என ஆளுங்கட்சி எம்.பி திஸ்ஸ குட்டியாராச்சியை சபாநாயகர் கடுமையாக எச்சரித்தார்.

பாராளுமன்றத்தின் இன்றைய (23) அமர்வை ஆரம்பித்து வைத்து, சபாநாயகர் அறிவிப்பை விடுக்கும்போதே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன, பாராளுமன்றத்தில் இல்லாத மற்றொரு பெண் ஆகியோரை, ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி, அதியுயர்சபையில் அவமதிக்கும் வகையில் பேசியதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் சபாநாயகர் என்ற வகையில் நான் ஆழமாக ஆராய்ந்துள்ளேன்.

திஸ்ஸ குட்டியாராச்சி எம்.பியின் உரை தொடர்பில் நான் கவலையடைகிறேன். அதியுயர் சபையில் பெண்களை அவமதிக்கும் வகையில் செயற்பட

தொடர்ச்சி P2

## “பிரபாகரன் ஒரு போதைப்பொருள் வர்த்தகர்”

■ ஒ. பா.நிரோஸ்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு போதைப்பொருள் வர்த்தகர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (23) நடைபெற்ற ஜனாதிபதி, பிரதமருக்கான செலவீனத் தலைப்புகள் மீதான விவாதத்தில் உரையாற்றிய கூட்டமைப்பு எம்.பி ஸ்ரீதரனின் உரைக்கு குறுக்கீடு செய்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## சபையின்...

அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் பலர் உயிரிழந்துள்ளதோடு, வைத்தியசாலைகளில் பலர் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், பலர் காணாமல்போயுள்ளனர். உயிரிழந்தவர்களுக்கு தமது அஞ்சலியை செலுத்துவதாகத் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் 11ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் நிமல் லன்ஷா இந்தப் பாலத்தை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி திட்டத்தை ஆரம்பித்து வைத்திருந்தார். இத்திட்டம் இடையில் நிறுத்தப்பட்டது. இது தொடர்பில் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ கவனம் செலுத்த வேண்டும்.

மேலும், விபத்தில் உயிரிழந்த, பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நட்டஈட்டை அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

### அனுமதியை பெறாத படகு சேவை

தற்போது விபத்துக்குள்ளாகியிருக்கும் நெடுஞ்சாலை அமைச்சின் அதிகாரிகளிடமிருந்து படகு சேவைக்கு எந்தவோர் அனுமதியும் பெற்றுகொள்ளப்படவில்லை என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

### யார் பொறுப்பு?

கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் இடம்பெற்ற படகு விபத்துக்கு யார் பொறுப்புக்கூற வேண்டும் என இம்மரான் மஹ்ரூப் எம்.பி சபையில் கேள்வி எழுப்பினார்.

இந்த விபத்தில் பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். இதுவொரு பாரிய பிரச்சினையாக இருக்கிறது. குறிஞ்சாக்கேணி பாலத்தை நிர்மாணிப்பதற்கு முன்னர், மாற்றுப் பாதை ஒன்றை நிர்மாணிக்க வேண்டும். அதனை நிர்மாணிக்காது இந்தப் பாலத்தை எப்படி நிர்மாணிப்பீர்கள் என நான் சபையில் கேட்டிருந்தேன் என்றார்.

எனினும் இதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர், "இதற்கு யார் பொறுப்புக்கூற வேண்டும். வீதி அதிகார சபையா, நகர, பிரதேச சபையா" என்று கேள்வி எழுப்பினார்.

## கோப்பாய் துயிலும்...

அதனால் துயிலும் இல்லத்துக்கு முன்பாக உள்ள தனியார் காணியில், மாவீரர் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுவது வழமையாகும்.

தற்போது மாவீரர் வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில், அக்காணியின் முன்பக்கமாக வீதியின் இருமருங்கினையும் துப்புரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, கோப்பாய் பொலிஸார், பெருமளவான இராணுவத்தினர் அப்பகுதியில் குவிக்கப்பட்டனர். சிவில் உடையில் வந்த இராணுவத்தினர் சிலர், தாமும் துப்புரவுப் பணியில் ஈடுபடுவதாக கூறி, துப்புரவுப் பணியில் ஈடுபட்டு இருந்தவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக நடந்து கொண்டனர். இதேவேளை, இராணுவத்தினரும் பொலிஸ் புலனாய்வாளர்களும் அங்கிருந்த ஊடகவியலாளர்கள் உள்ளிட்டவர்களை அச்சுறுத்தும் விதமாக புகைப்படம் எடுத்ததுடன் வாகன இலக்கங்களையும் பதிவு செய்தனர்.

## சபையில் சமர்ப்பித்து...

ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட நிறுவனங்களின் செலவின தலைப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டார்.

புதிய அரசியலமைப்பு வரைவு தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அதில் எவ்வித இரகசியமான விடயங்களும் இல்லை எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர் கூறியதாவது, 2019ஆம் ஆண்டில் நாம் வீழ்ச்சியடைந்த பொருளாதாரமொன்றையே பொறுப்பேற்றோம் என்பதையும் நினைவுகூர வேண்டும். இந்த ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவுகள் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2022 ஆம் ஆண்டிற்கான புதிய வணிகங்களைப் பதிவு செய்யும் தொழில்முனைவோரிடமிருந்து நாம் எந்தப் பதிவுக் கட்டணத்தையும் வசூலிக்கப் போவதில்லை. புதிய வர்த்தக சிந்தனைகளுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை கட்டியெழுப்ப கைகோர்க்குமாறு எமது நாட்டு இளைஞர்களை அழைக்கின்றோம்.

மக்களுக்கு வாக்குறுதி அளித்தால், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். ஏறக்குறைய 25 வருடங்களாக தீர்க்கப்படாத ஆசிரியர் - அதிபர் சம்பள முரண்பாட்டை இந்த வரவு செலவுத் திட்டத்தில் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக அதிக அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் முன்மொழிவுகள் மற்றும் விமர்சனங்களுக்கு நாங்கள் உன்னிப்பாகக் செவிமடுத்தோம். சில விமர்சனங்கள் நியாயமற்றவை. சில விமர்சனங்களில் ஏதேனும் நியாயம் இருப்பின், அவற்றை நாம் ஏற்று திருத்திக் கொள்ள எந்நேரத்திலும் தயாராக உள்ளோம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

அரசியலமைப்பு பற்றிப் பேசினீர்கள். நாம் இப்போது வரைவைத் தயாரித்து வருகிறோம். அதனை பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் சமர்ப்பித்து விவாதிப்போம் என்பதை நினைவூட்டுகிறேன்.

எனவே, இந்த விவகாரத்தில் இரகசியமாக எதையும் செய்ய மாட்டோம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன் என்றார்.

## சபாநாயகர் கடும் எச்சரிக்கை

வேண்டாம் என்றும் கடுமையாக எச்சரிக்கிறேன் எனவும் சபாநாயகர் தெரிவித்தார்.

இதுபோன்ற செயற்பாடுகள் எதிர்காலத்தில் நடைபெறாதிருப்பதை உறுதி செய்ய ஆளும், எதிர்க்கட்சி பிரதமக் கொறடாக்கள் இது தொடர்பில் இருதரப்பு எம்.பிகளுக்கும் அறியப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பெண்களை அவமதிக்கும் செயற்பாடுகள் எதிர்காலத்திலும் தொடர்ந்து இடம்பெற்றால், நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பேன் என்றும் சபாநாயகர் எச்சரித்தார்.

# படகுப் பாதை கவிழ்ந்து கோரம்

உடனடியாக செயற்பட்ட பிரதேச பொதுமக்கள், அவசர அம்புலன்ஸ் சேவை (1990) க்கு அழைப்பை ஏற்படுத்தியதுடன், கடற்படையினர், பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் ஒன்றிணைந்து, தண்ணீருக்குள் மூழ்கிய பொதுமக்களைத் தேடும் பணிகளில் ஈடுபட்டனர். நீருக்குள் மூழ்கி மீட்கப்பட்டவர்கள், உடனடியாக கிண்ணியா தள வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன், இந்த விபத்து சம்பவத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, குறித்த பகுதியில் மாணவர்கள் யாரும் காணாமல் போயிருந்தால் தகவல் வழங்குமாறு பள்ளிவாசல்களில் ஒலி பெருக்கி ஊடாக அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

பிரதேசமெங்கும் சோகமயமாக காணப்படுவதுடன், வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு பொதுமக்கள் தமது துக்கங்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், குறிஞ்சாக்கேணி பாலம் நிர்மாணப் பணி தொடர்பாக ஆத்திரமுற்ற மக்கள், கிண்ணியா புகாரியடிச் சந்தியில் டயர்களை எரித்து தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தியதால், குறித்த பகுதியில் பதற்ற நிலை காணப்பட்டது.

குறிஞ்சாக்கேணிப் பாலம் மிக நீண்டகாலமாக குன்றும் குழியுமாக உடைந்த நிலையில் காணப்பட்டதால், அதை அபிவிருத்தி செய்வது தொடர்பாக பல்வேறு கால கட்டங்களில் பல பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும், தற்போது அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், குறிஞ்சாக்கேணி பகுதியிலிருந்து கிண்ணியா நகருக்கு மக்கள் வருவதற்கு இந்தப் படகுப் பாதையையே பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அனர்த்தத்தில் காணாமற் போயிருந்த 17 பேர் தற்போதைக்கு காப்பாற்றப்பட்டுள்ளனர் என்றும் அதில் பாடசாலை மாணவர்கள் மூவர் அடங்குகின்றனர் என்றும் கடற்படை அறிவித்துள்ளது.

காணாமற்போன ஏனையோரை மீட்டெடுக்கும் பணிகளில், கடற்படையின் சிறப்புப் படையணி, உடனடி செயற்பாட்டுப் படையணி, கடற்படையணி உள்ளிட்ட சில சிறப்பு அணிகளும் சுழியோடிகளைச் சேர்ந்த எட்டு குழுக்களும் களமிறக்கப்பட்டுள்ளன என, கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, கிண்ணியாவில் நிகழ்ந்த இப்படகுப் பாதை விபத்தை அடுத்து மட்டக்களப்பு, வாழைச்சேனையில் நேற்று (23) வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டு, துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

## எதிர்க்கட்சியே அனுமதி வழங்கியது

எதிர்க்கட்சி எடுத்த நடவடிக்கையை அனுமதிக்க முடியாது என்றார்.

குறித்த சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று (23) பாராளுமன்றத்தில் குற்றச்சாட்டுகளை முன்வைத்தமைக்கு எதிராக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இந்தத் துரதிர்ஷ்ட சம்பவத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு அரசாங்கம் தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், படகுப் பாதை விபத்து தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இந்தப் படகுப் பாதை போக்குவரத்து சேவைக்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என குறிப்பிட்டார்.

நீண்டகாலமாக குறித்த களப்பின் குறுக்கே பாலமொன்று அமைக்க முடியாத நிலை காணப்பட்டதோடு, அதற்காக நல்லாட்சியில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எமது அரசாங்கத்தால் அம்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பாலமொன்று அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. வெகு விரைவில் அந்தப் பணிகள் பூர்த்தி செய்யப்படும்.

பாதுகாப்பற்ற முறையில் குறித்த படகுப் பாதையைப் பயன்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட நகர சபையால் அனுமதி வழங்கப்பட்டமையே இவ்வாறான துரதிர்ஷ்ட சம்பவம் ஏற்பட்டது. எனவே, எதிர்காலத்தில் சரியான நியமங்களோடு வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது களப்பு ஊடாக பயணிகள் போக்குவரத்து சேவையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கும் என்றார்.

## அரிய தமிழ்க் கல்வெட்டு

கோமரன்கடவல பிரதேசத்தில் உள்ள முக்கிய வீதியுடன் இணைந்திருக்கும் காட்டுப்பகுதியில் காணப்படுகின்றது. முன்னர் இப்பிரதேசம், கட்டுக்குளப்பற்று நிர்வாகப் பிரிவாக இருந்த போது, இந்த இடம் குமரன்கடவை என அழைக்கப்பட்டது. இங்குள்ள காட்டுப்பகுதியில் கல்வெட்டுடன் அதன் சமகாலத்துக்குரிய அழிவடைந்த சிவாலயமும் அதன் சுற்றாடலில் அழிவடைந்த கட்டட அத்திவாரங்களும் காணப்படுகின்றன.

இங்கு கண்டுபிடிக்கப்பட்ட இக்கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையின் முதல் தலைவரும் முதல் பேராசிரியரும் தென்னாசியாவின் புலமைமிக்க தொல்லியல், வரலாற்று அறிஞர்களில் ஒருவருமான கலாநிதி கா. இந்திரபாலா தெரிவித்திருக்கும் கருத்துகள் பின்வருமாறு:

"கங்கராஜ காலிங்க விஜயபாகு தேவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ள மன்னன் மாகன். இவன் கங்கவம்சத்தைச் சேர்ந்தவன் என்பது முன்னரே முன்வைக்கப்பட்ட ஒரு கருத்து. இக்கருத்து இலக்கிய ஆதாரங்களை அடிப்படையாக வைத்து ஊகிக்கப்பட்ட ஒரு கருத்தாகும். இப்போது இக்கல்வெட்டால், இது உறுதிப்படுத்தப்படுகின்றது.

காலிங்க விஜயபாகு என்ற பெயர் மாகனுக்கு இருந்தது முன்னரே இலக்கிய ஆதாரங்களால் அறியப்பட்ட செய்தி. சமகாலக் கல்வெட்டில் அது கொடுக்கப்படுவது இந்த ஆவணத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது.

ஸ்ரீகுலோத்துங்கசோழ காலிங்கராயன் என்பவன் இங்கு இரண்டு முக்கிய செயல்களைச் சாதித்தான் எனக் கூறப்பட்டுள்ளது. ஒன்று, அவன் ஈழத்தைக் கைப்பற்றினான். இரண்டாவது, அதன் விளைவாகக் காலிங்க விஜயபாகு தேவர்க்கு வீராபிஷேகம் நடத்தினான். இந்த இரண்டும் புதிய விடயங்கள்.

மாகன், தென்னிந்தியப் படைகளுடன் ஆட்சியைக் கைபற்றினான் என்பது முன்னரே இலக்கிய ஆதாரங்களில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இவற்றின் சான்றில் குழப்பம் அதிகம். மாகனுக்கு உதவியது தமிழ்ப் படைகள் என்றும், தமிழ்-கேரளப் படைகள் என்றும், கலிங்கத்துப் படைகள் என்றும் தெளிவற்ற கூற்றுகள் உள்ளன. இக்கல்வெட்டு இதைத் தெளிவுபடுத்த உதவுகிறது.

காலிங்கராயன் என்பவன் மாகனுக்கு உதவிய படையின் தளபதி என்பதும், அவன் முழுப் பெயரைப் பார்க்குமிடத்து அவன் சோழநாட்டைச் சேர்ந்த ஓர் உயர்நிலை அதிகாரி என்பதும், ஈழமண்டலம் 'எறிந்து' என்று கூறுவதால், பொலன்னறுவை அரசை வெளியில் இருந்து வந்து கைப்பற்றினான் என்பதும் இக்கல்வெட்டில் இருந்து ஊகிக்கப்படலாம்.

மேலும், காலிங்கராயன் மாகனுக்கு வீராபிஷேகம் செய்தபடியால், அவன் மாகன் திரட்டிவந்த சாதாரணக் கூலிப்படையின் தளபதியாக இருந்திருக்க முடியாது. அந்த அதிகாரம் அவனுக்கு எப்படிக் கிடைத்தது? அதனை மாகன் எப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதாய் இருந்தது? அவன் சோழ மன்னனுடைய படை ஒன்றின் தளபதியாக இருந்தான் என்றும், மாகன் விண்ணப்பத்துக்கு இணங்கி (ஏற்கெனவே பல முறை இலங்கைக்குப் படை அனுப்பிய) மூன்றாம் குலோதுங்க சோழன் இம்முறை மாகனுக்கு உதவினான் என்றும் ஊகிக்க இடமுண்டு" என்று குறித்த கல்வெட்டில் உள்ள வாசகங்களுக்கு கலாநிதி இந்திரபாலா விளக்கம் அளித்துள்ளார்.

## ஆளும், எதிர்க்கட்சி சபையில் தள்ளுமுள்ளு

தான் செய்யாத தவறுக்கு மன்னிப்புக் கோரப்போவதில்லை என குட்டியாரச்சி கூறினார்.

இதனால் ஆத்திரமடைந்த எதிர்க்கட்சி எம்.பிகளான சமிந்த விஜேசிறி, ஹேஷா விதானகே ஆகியோர் தங்களது ஆசனங்களில் இருந்து எழுந்து, சபையின் மத்திய பகுதிக்கு வந்து திஸ்ஸ குட்டியை கடுமையாகத் திட்டிதீர்த்தனர்.

இதன்போது திஸ்ஸ குட்டியும் ஆசனத்திலிருந்து எழுந்து வந்து ஆளுங்கட்சியின் முன்வரிசையில் நின்றுகொண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களை திட்டிகொண்டிருந்தார்.

இதனால், அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, இராஜாங்க காஞ்சன விஜேசேகர ஆகியோரும் ஆசனங்களில் இருந்து நடுப்பகுதிக்கு வந்ததால், சபையில் இரு தரப்பினருக்கும் இடையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து விரைந்து செயற்பட்ட படைக்கல சேவிதர், ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்வதை தடுத்தனர். கூடவே எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவும் சபையின் மத்திய பகுதிக்கு வந்து சமிந்த விஜேசிறி, ஹேஷா விதானகே ஆகியோரை விலக்கி அவர்களது ஆசனங்களுக்கு திருப்பியனுப்பினார்.

## தௌபீக் எம்.பியின் வீட்டின் மீது தாக்குதல்

உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்கின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலால் வீட்டின் கதவு, யன்னல்கள், அவற்றின் கண்ணாடிகள் உடைத்து நொறுக்கப்பட்டுள்ளன. அத்துடன், பாரிய படலையும் விழுத்தி சாய்க்கப்பட்டுள்ளது.

தாக்குதல்களால் ஏற்பட்ட சேத விவரங்கள் எவையும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனவரி 12க்கு...

இந்த வழக்கு நீதியரசர்களான தமித் தோட்டவத்த, அமல் ரணராஜா, நவரத்ன மாரசிங்க ஆகியோரடங்கிய தீர்ப்பாயம் முன்னிலையில் நேற்று (23) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அதன்போது நவ்பர் மௌலவி உள்ளிட்ட பிரதிவாதிகளை சிறைச்சாலை அதிகாரிகள் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

நௌபர் மௌலவி, சஜித் மௌலவி, மொஹமட் மில்ஹான், சாதிக் அப்துல்லா, ஆதம் லெப்பை, மொஹமட் சனாஸ்தீன், மொஹமட் ரிஸ்வான் உட்பட 25 பிரதிவாதிகளுக்கு எதிராக 23,270 குற்றச்சாட்டுகள் முன்னர் தாக்கல் செய்யப்பட்டதுடன், ஒக்டோபர் 4ஆம் திகதி குற்றப்பத்திரிகையும் வாசிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளில் கொலைக்கு சதி செய்தல், உதவி செய்தல், ஆயுதங்கள், வெடிமருந்துகளை சேகரித்தல், கொலை முயற்சி ஆகியவை அடங்குகின்றன.

ஐஎஸ்ஐஎஸ் உடன் தொடர்புடைய உள்ளூர் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான தேசிய தௌஹீத் ஜமாத்தைச் சேர்ந்த ஒன்பது தற்கொலை குண்டுதாரிகள், இலங்கையின் கத்தோலிக்க தேவாலயங்கள், நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து 2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் தினத்தன்று நடத்திய தொடர் குண்டுவெடிப்பில் 270 பேர் கொல்லப்பட்டதுடன், 500 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அனைவரையும் தண்டிப்பது...

தொடர்ந்து தெரிவித்த அவர், தனக்குத் தெரிந்த வரை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் உரிய முறையில் நடத்தப்பட்டு வருகின்றது. உலகில் வேறு நாடுகளில் இவ்வாறான பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெற்ற பின்னர், நீதிமன்ற விசாரணைகள் இடம்பெற்று எத்தனை வருடங்களுக்கு பின்னர், தண்டனை அல்லது தீர்ப்பளிக்கப்படுகிறது என்பதை ஆராய்ந்து பார்க்கலாம் என தெரிவித்தார்.

அதேபோலதான், அண்மையில் நியூசிலாந்தில் நடத்தப்பட்ட பயங்கரவாத சம்பவத்தின் பின்னராக, எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் பார்க்கலாம். ஆனால் இலங்கையின் நீதிமன்ற செயற்பாடுகளில் இவ்வாறான பிரச்சினை சென்றால் எமது நாட்டு நீதிமன்ற முறைகளுக்குள் எந்தவொரு தீவிரவாத செயற்பாடுகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு சிறிது கால தாமதம் ஏற்படும் என தெரிவித்தார்.

சாதாரணமாக நீதிமன்ற செயற்படுகளை முன்னெடுப்பதற்கான காலவரையறை ஒன்று உள்ளது. அந்தக் கால வரையறையை சாதாரணமாக சிறிதளவு குறைத்தாலும், பெரும்பாலும் இவ்வாறான வழக்குகள் தொடர்பில் அதிக காலம் செல்வதை மறுக்க முடியாது என்றார்.

## 'பிரபாகரன் ஒரு...

இதன்போது உரையாற்றிய ஸ்ரீதரன், 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கில் போதைப்பொருள் பாவனை இருந்ததா? இந்த வர்த்தகத்தில் யாராவது ஈடுபட்டார்களா? 2009ஆம் ஆண்டுக்குப் பின்னரே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னரே போதைப்பொருள் பாவனை வடக்கில் அதிகரித்தது எனவும் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கீடு செய்த அமைச்சர் டக்ளஸ், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு போதைப்பொருள் வர்த்தகர். இது ஸ்ரீதரனுக்கு தெரியுமோ தெரியாது. அத்துடன், மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது சில விடயங்களை வடக்கிற்கு செய்ததாக ஸ்ரீதரன் ஏற்றுக்கொள்கின்றார்.

இதற்கு முன்னர் ஏன் செய்யப்படவில்லை என்று கேட்கிறார். அதற்கு முன்னர் செய்ய அங்குள்ளவர்கள் விடவில்லை. தடைகளை ஏற்படுத்தினார்கள் எனவும் தெரிவித்தார்.

டக்ளஸின் குறுக்கீடால் ஆத்திரமடைந்த ஸ்ரீதரன், நான் அரசுக்கு வக்காளத்து வாங்கும் கையாள் அல்ல. அரசினது கால்களைக் கழுவும் வேலையும் செய்பவனல்ல. அல்லது உயிருக்கு பயந்து கவச வாகனங்களில் பயணிப்பவனுமல்ல. தமிழர்கள் எதற்கும் துணிந்தவர்கள் என்றார்.

# “ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கம் ஜே.வி.பிக்கு கிடையாது”

■ முஹம்மட் ஆஸிக்

சிதைந்து போன நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றுவது எமது நோக்கம் அல்ல. நல்லதொரு நாட்டை உருவாக்குவதே எமது நோக்கமாகுமென ஜே.வி.பியின் உயர் அரசியல் பீட உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்கா தெரிவித்தார்.

மடவளை நகரில் நடைபெற்ற ‘கிராமத்திலிருந்து’ என்ற வேலைத் திட்டத்தை பாத்ததும்பரைத் தொகுதியில் மேற்கொண்ட பிரசாரத்தின் போதே இதனைத் தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்கா தெரிவிக்கையில்:

ஊடகங்களுக்கு முன் தோன்றி வீர வசனம் பேசி, அரசாங்கத்தையும் ஆட்சியாளர்களையும் விமர்சித்து மக்களை உசார்படுத்தியவர்கள், வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுத்துள்ளனர். இதன் மூலம் அவர்களது இரட்டை வேடம் வெளிவந்துள்ளது என்றார்.

இப்பிரச்சார நிகழவின்போது கலந்து கொண்ட ஜே.வி.பியின் உயர் அரசியல் பீட உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கே.டி. லால்காந்தவும் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான கருத்துகளை வெளிட்டார்.



# கோரிக்கை அடங்கிய மகஜர் கையளிப்பு



புதிய அலை கலை வட்டத்தின் கலைத் துறை மேம்பாட்டுக்கான கோரிக்கை அடங்கிய மகஜர் கையளிக்கும் நிகழ்வு திங்கட் கிழமை மாலை புரவலர் ஹாசிம் உமரின் இல்லத்தில் நடைபெற்றது. வட்டத்தின் ஸ்தாபகர் ராதா மேத்தா மகஜரை புரவலர் ஹாசிம் உமரிடம் வழங்குவதை காணலாம். வட்டத்தின் தலைவர் ஷண்மு, பொருளாளர் ஓவியன், ஈ.பலா ஆகியோர் அருகில் நிற்பதையும் காணலாம்.



# அபிவிருத்தி பணிகள் முன்னெடுப்பு

ஜனாதிபதியின் தேர்தல் முன்மொழிவுகளின் பிரகாரம் ‘சுபீட்சத்தின் நோக்கு’ எனும் கொள்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் கிராமிய வீதிகள், ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சால் கிராமிய வீதிகளின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிந்தவூர் இளைஞர் செயற்பாட்டாளரும், வனவிலங்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் நிந்தவூர் பிரதேசத்துக்கான இணைப்புச் செயலாளருமான ஆதம் பாசித் ஹுஸ்னியின் வேண்டுகோளுக்கிணங்க இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவின் பரிந்துரைக்கு அமைய நிந்தவூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 25 கிராம சேவகர் பிரிவுகளில் 45 வீதிகளுக்கு கொங்கிரீட் இடும் பணிகள் வனவிலங்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் அஞ்சன திஸாநாயக்கவால் நிந்தவூரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவின் செயலாளர் டி. ராஜபக்ஷ, நிந்தவூர் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம் சுல்பிகார், அமைச்சரின் இணைப்பாளர்களான எஸ்.எல்.ஏ. அஸீஸ், ஏ.ஆர். எம். தௌபீக், ஏ.ரிஸ்வான் ஆகியோருடன் பொது மக்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## மூடப்பட்டிருந்த அறநெறிப் பாடசாலைகள்

# மீண்டும் 28 இல் ஆரம்பம்

■ வி.ரி.சகாதேவராஜா



கொரோனா பேரிடர் காரணமாக மூடப்பட்டிருந்த நாட்டிலுள்ள அறநெறிப் பாடசாலைகளை எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் சுகாதார நெறிமுறைக்கிணங்க மீளத்திறக்குமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அறநெறிப் பாடசாலைகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு வசதியாக பெற்றோர், அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தினர், பொறுப்பான உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

உரிய சுகாதர நடைமுறைகளை கட்டாயம் பின்பற்றவேண்டும். எனவே, இதுவிடயத்தில் சகலரும் கவனம் செலுத்துமாறும் பணிப்பாளர் உமாமகேஸ்வரன் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

# ஒரே நாடு, ஒரே சட்டம் செயலணியே சட்டவிரோதமானது

## சபையில் போட்டுடைத்தார் ரணில்

■ பா.நிரோஸ்



ஞானசார தேரர் தலைமையிலான ஒரே நாடு, ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செலவீனங்களின் கீழ், இந்தச் செயலணிக்கு ஒரு சதம் கூட செலவிட முடியாது என முன்னாள் பிரதமரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையின் ஒருபகுதி மாத்திரமே சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. மற்றொரு பகுதி எங்கே? அதனையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க எம்.பி மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதி, பிரதமர ஆகியோருக்கான செலவினத் தலைப்புகள் மீதான விவாதத்தில் நேற்று (23) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க எம்.பி, நாட்டின் தற்போது பொருளாதார நிலைமைகளால், அரசியலில் பெரும் வெடிப்பு ஏற்படும்.

ஒரே நாடு, ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணி நியமிக்கப்பட்டமை தொடர்பில் அமைச்சர்களுக்கு தெரிய ப்படுத்தப்பட்வில்லை. நீதி அமைச்சர் அலி சப்ரிக்கு இந்த செயலணி தொடர்பில் தனக்குத் தெரியாது எனக் கூறியிருந்தார். அமைச்சரவையில் கூட இது தொடர்பில் கலந்துரையாடப்படவில்லை. எனவே ஒரே நாடு, ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணி சட்டவிரோதமாகவே அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஒரு சதம் கூட நிதி ஒதுக்கீடு செய்யப்பட முடியாது. அவ்வாறு இந்த ஜனாதிபதி செயலணிக்கு நிதி செலவிடும் அதிகாரிகளுக்கு எதிராக தண்டனையை பெற்றுக்கொடுக்க முடியும்.

நாட்டில் மோசமான பொருளாதார நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் எதிர்காலத்தை மூன்று தனி நபர்களிடம் ஒப்படைக்க முடியுமா? மத்திய வங்கியின் ஆளுநர் அமைச்சரவையை விட அதிகமான அதிகாரங்களை கொண்டிருக்கிறார். நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் தொடர்பில் நிதி அமைச்சர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# “அரசியல் கண்ணாடிகளை கழற்றி விடுங்கள்”



காட்சிகளை நிறம் மாற்றிக் காட்டும் அரசியல் கண்ணாடிகளைக் கழற்றி விட்டு, நிஜங்களைப் பார்ப்பதற்கு முன்வரவேண்டும் என்று சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே, கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எத்தகைய தடைகளையும் சவால்களையும் அரசியல் குழப்பங்களையும் எதிர்கொண்டு, சமூக பொருளாதார அபிவிருத்தியை கட்டியெழுப்ப எமது ஆட்சி திடசங்கற்பம் பூண்டுள்ளது.

சகல இனமத சமூக மக்களும் சரிநிகர் சமன் என்ற சமத்துவ சிந்தனையை நடைமுறைப்படுத்தவே ஒரே நாடு,ஒரே சட்டம் என்ற திட்டத்தை ஜனாதிபதி அவர்கள் பிரகடனம் செய்திருக்கிறார்.

மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பார்கள். அவ்வாறான நிலை மாறி பரந்த வெளிச்சம் கூட மருண்டவன் கண்ணுக்கு பேயாக தெரியும் காலமாக இது மாறியிருக்கிறது. எமது தேசத்தின் மக்களது ஆரோக்கியமான வாழ்க்கையை முன்வைத்து, ஜனாதிபதி எடுத்து வருகின்ற முயற்சிகளை நான் ஒரு மக்கள் நேய நோக்கமாகவே பார்க்கிறேன்.

இரசாயன உரம், விவசாய உள்ளீடுகள், சுத்தமற்ற குடிநீர் காரணமாக எமது நாட்டில் சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான மரணங்கள் ஒரு வருடத்தில் ஏற்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சுமார் 1,25,000 க்கும் அதிகமானவர்கள் சிறுநீரக நோயாளர்களாக மாறி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியலில் மட்டுமன்றி அபிவிருத்தியிலும் சமத்துவம் கேட்டுத்தான் நாம் அன்று உரிமை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோம். அந்த வகையில் எமது உரிமை போராட்ட வழிமுறையை மாற்றி தேசிய நல்லிணக்க பாதையில் பயணிக்க தொடங்கியிருந்தாலும் அபிவிருத்தியில் சமத்துவம் என்ற எமது எண்ணங்களும் ஈடேறியே வருகின்றது என்றார்.

# பாகிஸ்தான் -இலங்கை வர்த்தக மகாநாடு கொழும்பில்







பாகிஸ்தான், ராவல்பன்டி வர்த்தக சங்கமும் கொழும்பு பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் அலுவலகமும் இணைந்து இலங்கை - பாகிஸ்தான் வர்த்தக முதலீடு மற்றும் பாவனைப்பொருட்கள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சம்பந்தமான மாநாடு நேற்று செவ்வாய்க்கிழமை (23) கொழும்பு சங்கரில்லா ஹோட்டலில் நடைபெற்றது. இம்மாநாடு பாகிஸ்தான் பதில் உயர் ஸ்தானிகர் தன்வீர் அஹமத் தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டுக்கு வர்த்த அமைச்சர் பந்தல குணவர்த்தன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பாகிஸ்தான்-இலங்கை வர்த்தகர்கள் 150க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். இலங்கை வர்த்தகர்களுடன் பாகிஸ்தான் வர்த்தகளும் இணைந்து ஒன்பது உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. பாகிஸ்தானில் உற்பத்தியான மருந்துவகைகள் கொண்ட 2 உடன்படிக்கைகள் இலங்கை வர்த்தக சபையும் பாகிஸ்தான் வர்த்தக சபை 2 உடன்படிக்கைகளும் கொழும்பு - பாகிஸ்தான் உயர்கல்வி நிறுவனங்கள் உடன்படிக்கைகள் 2, குளிராக்கி இயந்திரம், மோட்டார் உதிரிப் பாகங்கள் சம்பந்தமான உடன்படிக்கைகள் 2 கைச்சாத்திடப்பட்டன.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் இலங்கை மற்றும் பாகிஸ்தான் வர்த்தக சங்கங்களுடன் இணைந்து இலங்கையில் பாகிஸ்தான் பொருளாதாரம் சம்பந்தமான மாநாடு வர்த்த அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் நடைபெறவுள்ளது.

# ரணிலை மஹிந்தவே காப்பாற்றினார்

■ பா.நிரோஸ்



என்னைக் கொலை செய்ய முயற்சித்த விவகாரத்தில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது என்னால் முறைப்பாடு செய்ய முடியும். எனினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, “அந்த விடயத்தை விட்டு விடுங்கள்” என என்னிடம் கேட்டுக் கொண்டதாலேயே முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது முறைப்பாடு செய்யவில்லையென அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

வரவு-செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் நேற்று (23) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் நான் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பிகள் பலர் பழிவாங்கப்பட்டோம். முதல் 10 பத்து திருடர்கள் என அப்போதைய ஆளும் தரப்பினர் தொடர்பில் நான் முறைப்பாடு செய்து 2 வருடங்களாகின்றன. எனினும் இதுவரையில் ஒருவரிடமிருந்து கூட வாக்குமூலம் பெறப்படவில்லை.

இதேவேளை, எதிர்க்கட்சியின் முன்வரிசையில் உள்ள உறுப்பினர் ஒருவர் தொடர்பில் என்னிடம் இருக்கும் ஆதாரங்களை வைத்து வாக்குமூலம் வழங்கினால் பிணை கூட வழங்காது அவரை கைது செய்து சிறையில் அடைப்பார்கள். அந்த முன்வரிசை உறுப்பினர் மட்டுமல்ல அவரது முழு குடும்பமும் கைது செய்யப்படுவார்கள் எனவும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இதேபோல முன்னாள் எம்.பி ரஞ்சன் ராமநாயக்கவுடன் இணைந்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்னை கொலை செய்ய முயன்றார் என முறைப்பாடு செய்தால் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கைது செய்யப்படுவார். இந்த விடயத்தை விட்டு விடுங்கள் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கேட்டு கொண்டதாலேயே நான் இந்த விடயத்தை விட்டுவிட்டேன் எனவும் தெரிவித்தார்.

KÄRCHER

**உபயோகிக்கப்பட்ட இயந்திரங்கள் விற்பனைக்கு**

ப்ரஷர் வொஷர்ஸ் / வெக்யூம் க்ளீனர்ஸ் (ஈரமான/உலர்ந்த) மற்றும் தரையை சுத்தம் செய்யும் இயந்திரம் உள்ளிட்ட பல இயந்திரங்கள் உண்டு.

**மொத்தமாக தொகையாக விற்கப்படும்**

**எதிர்வரும் 2021 நவம்பர் 29ஆம் திகதி முதல் டிசம்பர் 03ஆம் திகதி வரை.**
அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

**077 395 9234/ 0112 369630-2**

துடவ்வ ட்ரேடிங் கம்பனி (பிரைவட்) லிமிடெட்
இல. 509. எல்விடிகல மாவத்தை வீதி, கொழும்பு 05

கிண்ணியாவிலும் இறக்காமத்திலும் கொரோனா சடலங்களை

# அடக்கம் செய்ய அனுமதிக்கவும்

**தென்கிழக்கு சமூக அபிவிருத்தி மன்றம் வேண்டுகோள்**

அஸ்லம் எஸ்.மௌலானா

கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் உடலங்களை, கிண்ணியா, இறக்காமம் போன்ற இடங்களிலும் அடக்கம் செய்ய அவசர நடவடிக்கை எடுக்க வேண்டுமென தென்கிழக்கு சமூக அபிவிருத்தி மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனை வலியுறுத்தி ஜனாதிபதி, பிரதமர், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்திருப்பதாக மன்றத்தின் செயலாளர் ஏ.எம்.ஆஷிப், நேற்று (23) ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; "கொரோனாவால் மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்பட்டமைக்கு எதிரான போராட்டங்களையடுத்து, இவ்வாறான ஜனாஸாக்களை அடக்குவதற்காக அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதுடன், அதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி, மஜ்மா நகர் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அன்று தொடக்கம் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் மாத்திரமல்லாமல் இந்து, பௌத்தர், கிறிஸ்தவர் உள்ளிட்ட அனைத்து இனத்தவரினதும் சடலங்கள் அங்கு அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை சுமார் 3,300 இற்கு மேற்பட்ட உடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில், இடப்பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அங்கு இன்னும் சுமார் 100 சடலங்கள் வரையே அடக்கம் செய்ய முடியும் எனவும் ஓட்டமாவடி பிரதேச சபை அறிவித்துள்ளது.

ஆகையால், ஏற்கெனவே கொவிட் ஜனாஸாக்களை அடக்குவதற்காக தெரிவுசெய்யப்பட்டு, பரிந்துரைக்கப்பட்டுள்ள திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா, அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் போன்ற இடங்களிலும் அடக்கம் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்று மேலும் தெரிவித்தார்.

தடை உத்தரவு கோரி தாக்கல் செய்யப்பட்ட

# வழக்கு தள்ளுபடி

எஸ். நிதர்ஷன்



மாவீரர் தினத்துக்கு தடை உத்தரவு வழங்குமாறு கோரி, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு பொலிஸார் இணைந்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு, நேற்றைய தினம் (23), தள்ளுபடி செய்யப்பட்டது.

அறுவருக்கு எதிராக மாவீரர் நினைவேந்தலுக்கு தடை விதிக்க கோரி, மேற்குறிப்பிட்ட இரண்டு பொலிஸ் நிலையங்களால், மல்லாகம் நீதிமன்றுக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், வழக்கை, நேற்று விசாரித்த ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான், குறித்த நிகழ்வு நடைபெறும் என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை எனத் தெரிவித்து, வழக்கை தள்ளுபடி செய்வதாக உத்தரவிட்டிருந்தார்.

அத்துடன், குறித்த அறுவரும், இலங்கையின் சட்டத்திட்டங்களை மீறுவார்களேயானால், அவர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்க முடியும் எனவும், நீதவான் தெரிவித்தார்.

குறித்த வழக்கில், சிரேஷ்ட சட்டத்தரணி சிறீகாந்தா, சிரேஷ்ட சட்டத்தரணி சுகாஷ், சட்டத்தரணி ராகினி நடராசா சட்டத்தரணி வெலினா, சட்டத்தரணி நிரோசன், சட்டத்தரணி சுதர்சினி ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

# முத்திரை இடுதல் மும்முரம்

எம்.எஸ்.எம். ஹனீபா

அம்பாறை மாவட்டத்தில் 2021/2022 அளவை நிறுவை உபகரணங்களை சரிபார்த்து, முத்திரை இடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை வர்த்தக நிலையங்கள், அங்காடி வியாபார நிலையங்கள், கூட்டுறவுச் சங்கம் போன்றவற்றில் உள்ள நிறுக்கும், அளக்கும் உபகரணங்கள் பரிசோதனை செய்யப்பட்டு இன்று (24) முதல் 26ஆம் திகதி வரை அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் காலை 09.30 மணி தொடக்கம் 03.30 மணி வரை முத்திரை இடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

29ஆம் திகதி ஒலுவில் வாசிக சாலையில் 09.30 மணி தொடக்கம் மாலை 03.30 மணி வரை முத்திரை இடும் பணி நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அளவை நிறுவை உபகரணங்களுக்கு சரிபார்த்து முத்திரையிட தவறுபவர்களுக்கெதிராக நீதிமன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பூர்வீக நூதனசாலை மீளத்திறப்பு

எம்.எஸ்.எம்.நூர்தீன்



காத்தான்குடி பூர்வீக நூதனசாலை இரண்டு வருடங்களுக்குப் பின்னர் மக்கள் பாவனைக்காக நேற்று (23) மீளத் திறக்கப்பட்டது.

இலங்கை முஸ்லிம்களின் பூர்வீக வரலாற்றைக் கூறும் வகையில், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வால் 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி இந்தப் பூர்வீக நூதனசாலை காத்தான்குடியில் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் இயங்கி வந்த இந்த பூர்வீக நூதனசாலையை தொடர்ச்சியாக தொல்பொருள் திணைக்களம் கொண்டு செல்ல முடியாது என அறிவித்தையடுத்து, காத்தான்குடி நகர சபை இதைப் பொறுப்பேற்றுள்ளதாக காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் தெரிவித்தார்.

கொரோனா பரவல் அச்சம் காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக இது மூடப்பட்டிருந்தது. இதையடுத்து நேற்று இந்தப் பூர்வீக நூதனசாலை மீள திறக்கப்பட்டது.

காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி றிப்கா, காத்தான்குடி நகர சபை உறுப்பினர்கள், உலமாக்கள், நகர சபை ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பூர்வீக நூதனசாலை தினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை திறந்திருக்கும் என காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் தெரிவித்தார்.



தேசிய கராத்தே அணிக்கு தெரிவான

# வீரர், வீராங்கனைகள் கௌரவிப்பு

வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியிலிருந்து தேசிய கராத்தே அணிக்கு தெரிவுசெய்யப்பட்ட வீரர், வீராங்கனையைக் கௌரவிக்கும் நிகழ்வு, மட்டக்களப்பு மாநகர சபையில் நேற்று (23) நடைபெற்றது.

மட்டக்களப்பு ஜப்பான் கராத்தே மரியோகிக்காய் சங்கத்தின் வீரர், வீராங்கனையே இவ்வாறு தேசிய கராத்தே அணிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு ஜப்பான் கராத்தே மரியோகிக்காய் சங்கத்தின் பிரதான போதனாசிரியர் பொறியியலாளர் சிகான் முருகேந்திரன் வழிகாட்டலில், போதனாசிரியர் எச்.ஆர்.சில்வாவின் பயிற்றுவிப்பு ஊடாக ஆர். துஸ்யந்தன், வி. விதுஜா ஆகிய வீரரும் வீராங்கனையுமே தேசிய கராத்தே அணிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்திலிருந்து முதன்முறையாக பெண்ணொருவர், தேசிய கராத்தே அணிக்கு மட்டக்களப்பிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், 21 வயதுக்குட்பட்ட தேசிய அணியில் முதன் முறையாக மட்டக்களப்பிலிருந்து ஆண் ஒருவரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர்களை கௌரவிக்கும் நிகழ்வு, மட்டக்களப்பு மாநகர சபையின் விளையாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் தி. சரவணபவன், பிரதி மேயர் க. சத்தியசீலன், மாநகர சபை உறுப்பினர்கள், மட்டக்களப்பு ஜப்பான் கராத்தே மரியோகிக்காய் சங்கத்தின் போதனாசிரியர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விபத்தில்

# மாணவி உட்பட இருவர் படுகாயம்



எம்.றொசாந்த். எஸ். நிதர்ஷன்

யாழ்ப்பாணம் - தாவடி சந்தியில், நேற்று (23) காலை, இலக்கத் தகடு அற்ற பஸ் ஒன்று மோதியதில், பாடசாலை மாணவி உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவியும் நபர் ஒருவருமே, படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கனடா கிளையின் கருத்தை கோருகிறார் மாவை



எஸ். நிதர்ஷன்

கனடாவில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் கலந்துகொண்ட கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பத்துக்கு, கட்சியின் கனடா கிளையின் கருத்தை கோரியுள்ளதாக, இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா. சாணக்கியன் ஆகியோர், கனடாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, அங்கு வருகைதந்த சிலரால், குழப்பம் ஏற்படுத்தப்பட்டதை அடுத்து, பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

> **சிலரால், குழப்பம் ஏற்படுத்தப்பட்டதை அடுத்து, பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். குறித்த சம்பவம் யாரால், ஏன் ஏற்படுத்தப்பட்டது என்பது தொடர்பில் கருத்து கோரப்பட்டுள்ளது**

குறித்த சம்பவம் தொடர்பில், நேற்று முன்தினம் (22), ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே, மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதாவது, குறித்த சம்பவம் யாரால், ஏன் ஏற்படுத்தப்பட்டது என்பது தொடர்பில் கட்சியின் கனடா கிளையின் கருத்தை கோரியுள்ளதாக, மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யாழில் கூட்டம்

எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாண மாவட்டத்தில், கொரோனா தொற்று, டெங்கு ஒழிப்பு தொடர்பாக ஆராய்வதற்காக, மாவட்ட கொரோனா தடுப்பு செயலணியின் கூட்டம், நேற்று (23) நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில், மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில், காலை 10 மணிக்கு, இந்தக் கூட்டம் நடைபெற்றது.

குறித்த செயலணி கூட்டத்தின் போது, யாழ்ப்பாண மாவட்டத்தில், தற்போதுள்ள நிலைமையில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், தொடர்ச்சியாக மழை பெய்து வருவதன் காரணமாக, டெங்கு தொற்று நிலைமை, அனர்த்த முகாமைத்துவ விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன், யாழ். மாவட்ட மேலதிக செயலாளர் ம.பிரதீபன், 51ஆவது பிரிவின் இராணுவத் தளபதி சந்தன விக்கிரமசிங்க, யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர், முப்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், சுகாதார அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறுமி 7 மாத கர்ப்பம்; தாய், சகோதரி கைது

**சந்தேகநபர் தலைமறைவு**

கனகராசா சரவணன்

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் 15 வயதுச் சிறுமியை 7 மாத கர்ப்பிணியாக்கிய ஒரு பிள்ளையின் தந்தையான சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார்.

அச்சிறுமியின் சகோதரி, தாய் ஆகியோரை நேற்று முன்தினம் (22) கைது செய்துள்ளதாக திருக்கோவில் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.எஸ்.எஸ். சமந்த தெரிவித்தார்.

சிறுமியின் சகோதரியின் கணவனான 31 வயது நபரே தலைமறைவாகியுள்ளார்.

இது தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், சிறுவர் பிரிவு பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு, சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

தலைமறைவாகிய நபரை தேடி, கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பெரும் குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அதேவேளை, சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ள உடந்தையாக இருந்த சிறுமியின் 54 வயது தாயார், சிறுமியின் 24 வயது சகோதரி ஆகிய இருவரையும் கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# மதுபானங்களுடன் ஒருவர் கைது



கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேசத்தில் 50 கால் போத்தல் மதுபானங்களுடன் நபரொருவரை, நேற்று (23) அதிகாலை கைது செய்துள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிசாந்த அப்புகாமி தெரிவித்தார்.

விசேட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து, வலையிறவு பாலத்தில் வைத்து குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பூநகரி பிரதேச சபையில்

# ஆளுந்தரப்பால் பட்ஜெட் தோற்கடிப்பு

சுப்பிரமணியம் பாஸ்கரன்

பூநகரி பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், ஆளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினாலேயே தோற்கடிக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்துடனான பிரதேச சபை அமர்வு, பூநகரி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் ஐயம்பிள்ளை தலைமையில், நேற்று (23) காலை 10 மணிக்கு, ஆரம்பமானது. இதன்போது, 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சபை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதன்போது, ஆதரவாக 8 வாக்குகளும் எதிராக 10 வாக்குகளும் குறித்த வரவு - செலவுத் திட்டத்துக்கு கிடைத்திருந்தது.

அதாவது, 11 பேர் கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர்களில் 10 பேரும் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் ஒருவரும் எதிராக வாக்களித்தனர்.

தவிசாளர், சுதந்திர கட்சி உறுப்பினர் இருவரும், ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் ஒருவரும், சுயேட்சைக்குழு உறுப்பினர்கள் நால்வரும், ஈபிடிபி கட்சி உறுப்பினர் ஒருவரும் ஆதரவாக வாக்களித்தனர்.

இதனால் குறித்த வரவு செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர், அனைத்து வட்டாரங்களிலும் வெற்றி பெற்று 11 ஆசனங்களுடன் ஆட்சி அமைத்தனர். தவிசாளரை பதவி விலகுமாறு பல தடவைகள் ஆளும் தரப்பினரால் கோரிக்கை விடப்பட்ட நிலையில், நேற்றைய தினம், குறித்த வரவு - செலவு திட்டம் ஆளும் தரப்பினராலேயே தோற்கடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






## கௌரவிப்பு...

கொட்டகலை வீ டீச்சர் அமைப்பின் ஏற்பாட்டில், கொட்டகலை பிரதேசத்தில் 25 வருடகால ஆசிரிய சேவையை பூர்த்திசெய்த ஆசிரியர்களை கௌரவப்படுத்தும் நிகழ்வு கொட்டகலை ஷஸ்மிக்கா மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது, பிரதம அதிதியாக நுவரெலியா கல்வி வலய கோட்டம் இரண்டிற்கான கோட்டக்கல்வி பணிப்பாளர் ஜெகதீஸ்வரன், கொட்டகலை ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபர் த. ஜெயக்குமார், பீஷ்கோர் நிறுவனத்தின் திட்டமிடல் முகாமையாளர் நோயல்சில்வஸ்டர், சீடா வள நிலையத்தின் இணைப்பாளர் பரமஜோதி ஆகியோர் கலந்து கொண்டனர். (பி. கேதீஸ்)

தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக

# அல்பியனின் ஆறு பிரிவுகளில் ஆர்ப்பாட்டம்




■ எஸ்.கணேசன்

அக்கரப்பத்தனை பெருந்தோட்டத்துக்குட்பட்ட அல்பியன் தோட்டத்தைச் சேர்ந்த ஆட்லோ, பிரஸ்டன், சின்னநாகவத்தை, நியூபிரஸ்டன் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 1,500 க்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் நேற்று (23) தொழிலுக்குச் செல்லாமல் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து சின்ன நாகவத்தை தொழிற்சாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தோட்டத் தொழிலாளர்கள் மீது, தோட்ட நிர்வாகம் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகவும், தேயிலை மலைகள் காடாகி கிடப்பதாகவும் கொழுந்து விளைச்சல் குறைவாக இருப்பதால் தற்போது தோட்ட நிர்வாகம் ஒரு நாள் சம்பளத்திற்கு 20 கிலோ கிராம் கட்டாயமாக பறிக்க வேண்டுமெனவும் தோட்டத் தொழிலாளர்களுக்கு அழுத்தம் கொடுத்து வருவதோடு, குறைவாக கொடுத்தால் கிலோ கணக்கில் சம்பளம் தருவதாகவும் இதனால் தொழில் ரீதியாக பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவித்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

காலை 9 மணி முதல் பகல் 12 மணிவரை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் அதிகாரிகளும் அக்கரப்பத்தனை பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்கள் வருகை தந்ததுடன் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தினர்.

தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டிய சலுகைகளை உடனடியாக வழங்குமாறும் தேயிலை மலைகளை துப்புரவு செய்யுமாறும் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலுக்கு தோட்ட நிர்வாகம் இணங்கியதையடுத்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கலைந்து சென்றனர்.



## இதுதான் ஹட்டன் வீதி

■ சுதத்.எச்.எம். ஹேவா

ஹட்டன்-டிக்கோயா நகர சபைக்குரிய பல வீதி கட்டமைப்புகள் சேதமடைந்து உள்ளதாக பிரதேசவாசிகள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

குறிப்பாக, ஹட்டன்-டிக்கோயா நகர சபைக்குரிய காமினிபுர, வில்ப்ரட் டவுன், பண்டாரநாயக்கபுர, வீரதுங்கபுர, பொன்னநகர் உள்ளிட்ட பல வீதிகள் பாரியளவில் சேதமடைந்து உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதிகளில் பல இடங்களில் ஆங்காங்கே குழிகள் காணப்படுவதால் வாகனங்களில் பயணிப்பதிலும் அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பாக ஓட்டோக்களில் இப்பாதைகளில் பயணிப்பது ஆபத்தாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

## குளவிக்கூடுகளை அகற்றித் தரவும்

### கெர்க்கஸ்வோல்ட் தொழிலாளர்கள் கோரிக்கை

■ எஸ்.சதீஸ்

குளவிகளின் அச்சுறுத்தலால் குளவிக்கூடுகளை அகற்றித் தருமாறு கெர்க்கஸ்வோல்ட் மேல்பிரிவு தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மடுல்சீமை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும், பொகவந்தலாவை கெர்க்கஸ்வோல்ட் மேல்பிரிவு தோட்ட 04ஆம் இலக்க தேயிலை மலையில் அதிகமான சட்டிக் குளவி கூடுகள் 3 மாதங்களாக காணப்படுவதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனை அகற்றித் தருமாறு பலமுறை கோரிக்கை விடுத்தபோதும், இது குறித்து தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லையென தொழிலாளர்கள் மேலும் தெரிவித்தனர்.



தற்பொழுது வெயில் காலம் ஆரம்பித்துள்ளதால், எந்த நேரத்திலும் இந்தக் குளவி கூடுகள் உடைந்து விழும் என்ற அச்சத்தின் மத்தியிலேயே, தாம் வேலை செய்வதாக தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, குறித்த குளவிக் கூடுகளை அகற்ற தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, கெர்க்கஸ்வோல்ட் மேல்பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சப்ரகமுவ மாகாணத்தில்

## நிரந்தர நியமனம்



■ சிவாணி ஸ்ரீ

சப்ரகமுவ மாகாணத்தால் 2019 ஆம் ஆண்டு தற்காகலிமாக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட, சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் 22 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில், சப்ரகமுவ மாகாண சபை கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் (22) இடம்பெற்றது.


குறித்தத் துறைகளில் 180 வேலை நாள்களைப் பூர்த்தி செய்தவர்களுக்கே சப்ரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால், இந்த நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது, சப்ரகமுவ மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, சப்ரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சாந்தி விஜேராஜா, மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் மஞ்சுலா இதிகாவெல உட்பட அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

39 வருட ஆசிரியர் சேவையிலிருந்து

## ஓய்வுப்பெற்றார்

■ பி.கேதீஸ்



திருமதி மலர்விழி சுப்பிரமணியம் 21ஆம் தனது 39 வருட ஆசிரியர், அதிபர், கல்விப் பணிப்பாளர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.

கதிரேசன், சரஸ்வதி தம்பதிகளுக்கு 1961ஆம் ஆண்டு இரண்டாவது புதல்வியாக கந்தபளையில் பிறந்த இவர், தனது ஆரம்ப கல்வியை கந்தபளை மெதடிஸட் கல்லூரியிலும் பின்னர் நுவரெலியா நல்லாயன் கல்லூரி மற்றும் கண்டி நல்லாயன் கல்லூரியிலும் கற்றார்.

82ஆம் ஆண்டு விஞ்ஞான, கணித பாட ஆசிரியராக இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் தனது ஆசிரியர் தொழிலை ஆரம்பித்த இவர், பின்னர் கந்தபளை மெதடிஸ்த கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி, 1985ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரை பார்க் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றினார்.

அதன் பின்னர் கந்தபளை மெதடிஸ்த கல்லூரியில் பிரதி அதிபராகவும் பின்னர் அதிபராகவும் 2007ஆம் ஆண்டு வரை கடமையாற்றினார். 2007ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு உள்வாங்கப்பட்ட இவர், நுவரெலியா கல்வி வலயத்தில் தமது கடமைகளை பொறுப்பேற்று சிறந்த முன்னுதாரணமாக இறுதி வரை செயற்பட்டுள்ளார்.

## கல்லுல்ல தொழிலாளர்கள் கவனயீர்ப்பு

கல்லுல்ல தோட்ட அதிகாரியை இடம்மாற்ற வேண்டும் உள்ளிட்ட 13 கோரிக்கைகளை முன்வைத்து, மடூல்சீமை கல்லுல்ல தோட்ட தொழிலாளர்கள் நேற்று (23) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து அவ்விடத்தில் வருகை தந்த மடூல்சீமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் விராளிபத்தனை தோட்ட உயரதிகாரி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.



இதனைத்தொடர்ந்து விராளிபத்தனை தோட்ட உயர் அதிகாரி பெருந்தோட்ட, முகாமையாளருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு சுமூகமான தீர்வொன்றை பெற்று தருவதாக கூறியதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை பணி பகிஸ்கரிப்பை தொடர்வதாகவும் தற்காலிகமாக போராட்டத்தை கைவிடுவதாகவும் கூறி கலைந்து சென்றனர்.

## கட்டடத் தொகுதியை பூட்டியது கொரோனா

■ எம். செல்வராஜா

பதுளை மாவட்டத்தின் சொரகுன மகா வித்தியாலயத்தில், 5 மாணவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, அந்தப் பாடசாலையின் 2,5, 10ஆம் வகுப்புகளைக் கொண்ட கட்டடத் தொகுதி முதல் மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் சமன் ஜீவந்த தெரிவித்தார்.

குறிப்பிட்ட வித்தியாலயத்தில் 40 மாணவர்களுக்கு 'அன்டிஜன்' பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட போது, குறிப்பிட்ட 5 மாணவர்களுக்கு தொற்று உறுதியாகியுள்ளது. இம் மாணவர்கள் நேற்று (23) கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

யட்டியாந்தோட்டையில் முதியவர்களுக்கு

## உலருணவுப் பொதிகளை வழங்க நடவடிக்கை

■ என்.ஆராச்சி

யட்டியாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள 32 முதியவர்களுக்கு, உலருணவுப் பொருள்கள் வழங்கி வைக்கும் நடவடிக்கை இந்த மாதம் 25ஆம் திகதி யட்டியாந்தோட்டை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்வாறு தெரிவு செங்யப்பட்ட 32 முதியவர்களுக்கு தலா 2,300 ரூபாய் பெருமதியான உலருணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்படவுள்ளதாக யட்டியாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரியங்கனி பெத்தங்கொட தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக கேகாலை மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜிகா விக்கிரமசிங்க கலந்துகொள்ளவுள்ளார்.

## வலப்பனை பிரதேச சபை தவிசாளருக்கு பிடியாணை

■ ஆ.ரமேஸ்

வலப்பனை பிரதேச சபையின் தவிசாளர் ஆனந்த ஹித்திட்டிகே அஜந்தவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு, வலப்பனை மாவட்ட நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் (22) பிடியாணை பிறப்பித்துள்ளது.

அவருக்கு எதிராக வலப்பனை நீதிமன்றத்தில் இராகலை நகர வர்த்தகர் ஒருவரால் வழக்கு ஒன்று தொடரப்பட்டுள்ளது.

இவ்வாறு தொடரப்பட்டுள்ள வழக்கில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள தவிசாளர் மன்றில் ஆஜராகாத நிலையில், இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இராகலை நகரில் வீதி அபிவிருத்தி பணிகள் இடம்பெறும் நிலையில், கட்டட அமைப்பு வேலை தொடர்பில் தவிசாளருக்கும்



வர்த்தகருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் தொடர்பில் குறித்த வர்த்தகர், தவிசாளருக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார்.

இவ்வாறு தொடரப்பட்டுள்ள வழக்கில், ஆஜராகும்படி பிரதேச சபை தவிசாளருக்கு வலப்பனை நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ள போதிலும் குறித்த வழக்குக்கு ஆஜராகாத நிலையில் இந்தப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# கிண்ணியாவின் துன்பியல் போன்று தொடர்வதற்கு இடமளியோம்

சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு மேல், வீடுகளுக்குள்ளே முடங்கிய மாணவர்கள், பட்டாம் பூச்சிகள் இரண்டு சிறகுகளையும் அடித்துக்கொண்டு, எவ்வளவு சுதந்திரமாகப் பறந்துதிரியுமோ, அதேபோன்றுதான், புன்முறுவலுடன் பாடசாலைகளுக்குச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

கொரோனா தொற்றால் மூடப்பட்டிருந்த பாடசாலைகள் யாவும் கட்டம்கட்டங்களாகத் திறக்கப்பட்டன. இறுதியாக, அனைத்துத் தரங்களும் நவம்பர் 22ஆம் திகதியுடன் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, மாணவர்கள் பிரித்துப் பிரித்து தினமொதுக்கி, பாடசாலைக்கு அழைக்கப்படுகின்றார்கள்.

உயர்தர வகுப்புகளை ஆரம்பிப்பதற்காக திறக்கப்பட்ட அன்றைய தினமே, கிளிநொச்சியில் மாணவி ஒருவர், பாதசாரி கடவையில் வாகனமொன்று முட்டிமோதியதால் மரணமடைந்துவிட்டார். மூன்றாவது தடைதாண்டலுக்கான முதல்நாளன்றே, மனங்களை நெருடிய அந்தப் பெரும்சோகம் கண்களைக் குளமாக்கிவிட்டது.

இதற்கு முன்னரும் இவ்வாறான துன்பியல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. மனித உயிர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். சில இடங்களில், உயிர்கள் எள்ளி நகையாடப்பட்டுள்ளன. பாதசாரி கடவையில் மட்டுமன்றி, வீதியோரங்களில் சென்றுகொண்டிருக்கும் போது ஏற்படும் கவனயீனங்களால் உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

திருகோணமலை, கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் படகு பாதையொன்று விபத்துக்கு உள்ளானதில், மாணவர்கள் 06 பேர் மரணித்துள்ளனர். அதற்குப் பின்னர் கொதித்தெழுந்த மக்கள், அதிகாரிகளுக்கு எதிராகக் குரல்கொடுத்து, எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர். பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்கின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தி, தமது ஆதங்கத்தை காண்பித்துள்ளனர்.

இதற்கிடையே, அதிகாரிகளும் ஒருவருக்கு ஒருவர் விரல் நீட்டி, குற்றஞ்சுமத்திக் கொண்டிருக்கின்றனர். போன உயிர்கள் மீண்டெழாது; உயிர்தப்பியவர்களின் மனங்களை அந்தப் படகுப்பாதை பயணம், நெருடிகொண்டேதான் இருக்கும்.

இவ்வாறான படகுப்பாதை பயணங்களை, பலரும் எளிதில் விரும்பவும் மாட்டார்கள். இவ்வனர்த்தம் ஒரு வடுவாகவே இருக்கும்.

சம்பவமொன்று இடம்பெற்றுவிட்டால், குற்றச்சாட்டுகளை முன்வைப்பது இலகுவானது. ஆனால், எதிர்காலங்களில் இவ்வாறான அனர்த்தங்கள் இடம்பெறாத வகையில், ஏதாவது யோசனைகள் முன்வைக்கப்பட்டு இருக்கின்றவா என்றால், பூஜ்ஜியமாகத்தான் இருக்கும்.

மக்கள் பிரதிநிதிகள், தத்தமது பிரதேசங்களின் பொதுப்பிரச்சினைகளை அரசாங்கத்தின் காதுகளுக்குள் கொண்டு செல்லவேண்டும். அதனை செவிமடுத்து துரித நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். அபிவிருத்தி எனும் மாயப் போர்வைக்குள் நின்றுகொண்டு, மக்களை ஏமாற்றாமல், சாதாரண மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வழிசமைக்க வேண்டும்.

பழைய பாலத்துக்குப் பதிலாக, புதிய பாலம் நிர்மாணிக்கப்படுகிறது. அதனால், தற்காலிகமாகவே இந்தப் படகுபாதை சேவையில் அமர்த்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அப்படியாயின், அது போக்குவரத்துக்கு உகந்ததா? அதில் எத்தனை பேர் பயணிக்க முடியும்? அத்துடன் எத்தனை கிலோ கிராம் நிறையை ஏற்றிக்கொண்டு செல்லமுடியும் உள்ளிட்டவை தொடர்பில், அனுமதி அளித்தவர்கள் தெளிவாக இருந்திருப்பார்களாயின் கிண்ணியா துன்பியல் இடம்பெற்றிருக்காது.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# புலம் பெயர்ந்தோரும் கூட்டமைப்பும்



எம்.எஸ்.எம். ஐயூப்

கனடாவில் டொரொண்டோ நகரில், சனிக்கிழமை (20) நடைபெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கூட்டத்தைக் குழப்பியதில், புலம்பெயர்ந்த தமிழர்கள் என்ன பயனை அடையப் போகிறார்கள் என்பதையும் அது, இலங்கை அரசியலிலும் தமிழர்களின் அரசியலிலும் எவ்வாறான பின்விளைவுகளை ஏற்படுத்தப் போகிறது என்பதையும், எதிர்காலத்தில் தான் அறிய முடியும்.

ஒன்று மட்டும் நிச்சயம்! இவ்வாறான சம்பவங்களால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மட்டுமல்லாது, ஜனநாயக வழியில் அரசியலில் ஈடுபடும் ஏனைய தமிழ்க் கட்சிகளும், பெரும் நெருக்கடியை எதிர்நோக்கப் போகிறார்கள் என்பதே அதுவாகும்.

காரணம், புலம்பெயர்ந்த தமிழ் மக்கள், நாட்டில் வாழும் தமிழ் மக்கள் மீது, சித்தாந்த ரீதியில் பெரும் அழுத்தங்களை ஏற்படுத்தி வருகிறார்கள். அந்த அழுத்தங்களை, இந்தத் தமிழ்க் கட்சிகள் எதிர்நோக்கியே ஆக வேண்டும்.

டொரொண்டோவில் நடைபெற்ற சம்பவம், சமூக ஊடகங்கள் மூலம் உலகம் முழுவதிலும் பரவிவிட்டது. கூட்டத்தைக் குழப்பியவர்கள், தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் என்றே கூறப்படுகிறது. விடுதலை புலிகள், கனடாவில் தடைசெய்யப்பட்ட அமைப்பாக இருந்த போதிலும் அவர்கள், விடுதலை புலிகள் அமைப்பின் கொடிகளுடனேயே கூட்டம் நடைபெற்ற இடத்துக்கு வந்து, அதைக் குழப்பி இருக்கிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன், இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போது, தமிழர் பிரச்சினைக்கு முறையான அரசியல் தீர்வொன்றை வலியுறுத்தி இருந்தனர். இதனை எதிர்த்த ஆர்ப்பாட்டக்காரர்கள், "அரசியல் தீர்வல்ல; தனித் தமிழ் நாடே தமிழ் மக்களுக்கு வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளனர்.

எனவே, இது தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிராக மட்டும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமாகக் கருத முடியாது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள், கூட்டத்தை இடைநடுவே நிறுத்தியமைக்காக, ஏனைய தமிழ்க் கட்சித் தலைவர்கள், மகிழ்ச்சி அடையவும் முடியாது.

ஏனெனில், தமிழ் ஈழத்தை கேட்காது, அவர்களும் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடம் தமது கருத்துகளைக் கூறி, அவர்களிடம் தார்மிக ஆதரவையோ, நிதி உதவியையோ கேட்க முற்பட்டால், அக்கூட்டங்களும் குழப்பியடிக்கப்படும் அபாயம் இருக்கிறது.

இப்போது, நாட்டில் உள்ள சி.வி விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமசந்திரன், செல்வம் அடைக்கலநாதன், த. சித்தார்த்தன் போன்றோர், தலைமை தாங்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தவொரு கட்சியும், தனித் தமிழ் ஈழத்தைக் கோரிப் போராடுவதில்லை. அவையும், 'அரசியல் தீர்வு' என்ற பொதுப் பதத்தையே பாவிக்கின்றன. அதனால், அவர்கள் எதைக் குறிக்கிறார்கள் என்பது வேறு விடயம்.

தமிழ் ஈழம் என்ற எண்ணக்கருவை உருவாக்குவதில், தற்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதான உறுப்பு கட்சியான, இலங்கை தமிழரசு கட்சியின் முன்னைய தலைவர்களே முக்கிய பங்காற்றினர். 1972ஆம் ஆண்டு, தமிழரசுக் கட்சியின் தலைமையில் உருவாக்கப்பட்ட தமிழர் ஐக்கிய முன்னணியே இந்த எண்ணக்கருவை, 1976ஆம் ஆண்டு உருவாக்கியது. அத்தோடு அதன் பெயரும் தமிழர் விடுதலை கூட்டணியாக மாற்றப்பட்டது.

ஆனால், 1905ஆம் ஆண்டு சுவீடனிலிருந்து நோர்வே பிரிந்ததைப் போல் அல்லது, 1993 ஆம் ஆண்டு செக்கோஸ்லோவாக்கியா செக் மற்றும் ஸ்லோவாக்கியா என இரண்டு நாடுகளாகப் பிரிந்ததைப் போல், அரசியலமைப்பு ரீதியாக சாத்வீகமான முறையில், தமிழ் ஈழத்தை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம், இலங்கையில் பெரும்பான்மை சமூகத்திடம் வளரவில்லை.

எனவேதான், இலங்கையில் உரிமைப் போராட்டம், பிரிவினை கோரிய ஆயுதப் போராக மாறியது. ஆனால், தமிழீழ சித்தாந்தத்தை வகுத்த அரசியல்வாதிகள், ஆயுதம் ஏந்தத் தயாராக இருக்கவில்லை. எனவேதான், அந்தச் சித்தாந்தத்தால் கவரப்பட்ட இளைஞர்கள் ஆயுதம் தாங்கி, அந்தச் சித்தாந்தத்தின் வழிவந்த அரசியல்வாதிகள் சிலரைத் துரோகிகள் என வர்ணித்தனர். அந்த அரசியல்வாதிகளை முடித்துக்கட்டவும் துணிந்தனர்; பல அரசியல்வாதிகளை ஒழித்துக் கட்டினர்.

2000ஆம் ஆண்டு, திடீரென புதியதொரு சூழ்நிலைமை உருவாகியது. தமிழர்களின் கோரிக்கைகளைப் பற்றி பேச்சவார்த்தை நடத்த வேண்டும் என்ற ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசனையை, அதுவரை எதிர்த்து வந்த ஐக்கிய தேசிய கட்சி, நோர்வேயின் அனுசரணையை சந்திரிகா பெற்ற போது, அதனை எதிர்க்கவில்லை.

ஜனநாயக வழியில் அரசியலில் ஈடுபட்டு வந்த தமிழ்க் கட்சிகள், புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதி என, ஒரே காலத்தில் முடிவு கூறத் தொடங்கின. அவை, அக்காலத்தில் தமிழ் ஈழத்தை தூக்கிப் பிடிக்காவிட்டாலும், அதை நிராகரிக்கவில்லை.

புலிகளும், அதுவரை துரோகிகள் எனத் தாமே வர்ணித்த ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் அமைப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி, சூமகமாக அவற்றைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டது.

தமிழ் ஈழத்துக்கான ஆயுதப் போராட்டம், பூகோள அரசியல், பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய அடக்குமுறை போன்ற பல காரணிகளின் விளைவாக நசுக்கப்பட்டு, ஆயுதப் போராட்டத்தின் ஏறத்தாழ சகல தலைவர்களும் அழிக்கப்பட்டனர். அதனையடுத்து, சகல தமிழ்க் கட்சிகளும் "நாம் நாட்டை பிரித்துக் கேட்கவில்லை; முறையான அதிகாரப் பரவலாக்கலையே கோருகிறோம்" என்றன.

தற்போது வெளிநாடுகளில் வாழும் தமிழர்களில் பெரும்பாலானோர், தமிழ் ஈழத்துக்கான போர்ச் சூழலைத் தவிர்ப்பதற்காகவே வெளிநாடு சென்றனர். இதனைப் புலிகளும் அக்காலத்தில் விமர்சித்து இருந்தனர். வெளிநாடு சென்றவர்கள், அங்கிருந்து ஆயுதப் போராட்டத்துக்கு பணம் அனுப்பி இருக்கலாம். அதிலும் சிலர் நிர்ப்பந்தத்துக்காகவே பணம் அனுப்பினார்கள் என்றும் ஊகிக்கலாம். அவர்களில் எவரும், ஆயுதப் போருக்காக நாடு திரும்ப விரும்பவில்லை.

தமிழ் ஈழத்தைப் பற்றிய அவர்களது தீர்மானம், நியாயமானதாக இருக்கலாம். நியாயமானது மட்டுமல்லாது, சரி என்றும் வாதிடலாம். ஆனால், அதனை அடைவது எவ்வாறு? அரசாங்கம், தமிழ் ஈழத்தை விரும்பி வழங்கப் போவதில்லை. சர்வதேச ரீதியாக அதற்கான நிர்ப்பந்தமும் இல்லை.

சர்வதேசம் அதிகாரப் பரவலாக்கலை மட்டுமே வலியுறுத்துகிறது. அவ்வாறாயின், தமிழ் ஈழத்துக்காக யார் ஆயுதம் ஏந்தப் போவது? வெளிநாடுகளில் ஆர்ப்பாட்டம் செய்வோர், இலங்கைக்கு வந்து ஆயுதம் ஏந்தத் தயாரா? பணம் அனுப்புவதைப் பார்க்கிலும், இது மிகவும் கடினமான முடிவாகும்.

நாட்டில் வாழும் தமிழ்த் தலைவர்கள் மீதான புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் சித்தாந்தத் தாக்கத்தை, மிக நீண்ட காலமாகவே அவர்கள் உணர்ந்து வருகிறார்கள். 2012ஆம் ஆண்டு, மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் 14ஆவது மாநாட்டின் போது, அக்கட்சியின் தலைவராக இருந்த இரா. சம்பந்தன், இவ்வாறு எடுத்துக் கூறினார். "இலங்கைத் தீவுக்கு வெளியில் வாழும் தமிழர்கள், தீவுக்கு உள்ளே வாழும் தமிழர்களுக்காக எடுக்கும் அனைத்து அரசியல் முன்னெடுப்புகளும் பகிரங்கமாக வெளியிடும் கருத்துகளும், இங்குள்ள களநிலைக்குப் பாதகத்தை ஏற்படுத்தாத வகையில் அமைய வேண்டும். இங்கு நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு, இடையூறுகளை விளைவிக்காதவையாக அமைய வேண்டும். ஏனென்றால், இங்குள்ள சூழ்நிலையை அனுசரித்து, இங்கேயே வாழும் மக்களால், இங்கேயே எடுக்கப்படும் முயற்சிகள் தான், உருப்படியான இறுதி விளைவுகளை ஒட்டுமொத்தமான தமிழ்த் தேசிய இனத்தின் மீதும் ஏற்படுத்தும்" என்றார்.


'சிங்கள டயஸ்போரா'வும் இதையே செய்கிறது. அவர்கள், ராஜபக்ஷவின் முன்னைய ஆட்சியின் போது, வெளிநாட்டு தூதரகங்களின் உதவியால் வெளிநாடுகளுக்குச் சென்று, அங்கு பாதுகாப்பாக இருந்து கொண்டு, மிக கடுமையாக ராஜபக்ஷர்களை விமர்சிக்கிறார்கள். அதேவேளை, அவ்வாறான கடுமையான தொனியைப் பாவிக்காதவர்களைக் கோழைகளாக சித்திரிக்க முயல்கின்றனர்.

இதுபோன்ற சித்தாந்த நெருக்குவாரத்தையே தாலிபான்கள் ஆப்கானிஸ்தானில் எதிர்நோக்கி இருக்கிறார்கள். பெண்கள் விடயத்திலான பிடியைத் தளர்த்துமாறு, முஸ்லிம் நாடுகள் உள்ளிட்ட சர்வதேசம், அவர்களை வற்புறுத்தி வந்த போதிலும், மறுபுறத்தில் அவ்வாறு வளைந்து கொடுத்தால், அதன் மூலம் பயன்பெற அல்-கொயிதாவும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பும் காத்துக் கொண்டு இருக்கின்றன.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானும் இப்போது இந்தப் பிரச்சினையை எதிர்நோக்கி வருகிறார். அவரும் தீவிரவாதத்துக்கு வளைந்து கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டு வருகிறார்.

இலங்கையில் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு, இவ்வாறான சித்தாந்த நெருக்குதல்கள் இல்லை. எனவே, அவர்களில் சிலருக்கு ராஜபக்ஷர்களைக் கடுமையாக விமர்சித்து பதவிக்கு வந்து, அவர்களுடனேயே சேர்ந்து சலுகைகளைப் பெற வாய்ப்புக் கிடைத்து இருக்கிறது. 20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை ஆதரித்ததைப் போல், திங்கட்கிழமை (22) நிறைவேற்றப்பட்ட வரவு செலவு திட்டத்தை, சில முஸ்லிம் கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் ஆதரித்ததன் பின்னணி அதுவாகும். மக்கள் மத்தியிலும் அதற்குப் பெரிதாக எதிர்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. அடுத்த முறையும், முஸ்லிம் சமூகம் இவர்களுக்கு வாக்களிக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

இது இலட்சியங்களுக்குப் பதிலாக, சலுகையே அரசியலின் நோக்கமாக மாறியதன் விளைவாகும். அது அரசியல்வாதிகளுக்கும் பொருந்துகிறது; மக்களுக்கும் பொருந்துகிறது.



## வாழ்வியல் தரிசனம்

அறிந்து கொள்ள ஆசைப்படும் விடயங்களை, எவரிடமும் கேட்டு அறிய வெட்கப்பட வேண்டாம். சிலர், ஆணவ மிகுதியால், தங்கள் சந்தேகத்தைக் கேட்கமாட்டார்கள். 'இவர்களிடமா நான் கேட்பது; எனது கௌரவத்துக்கு இவர்கள் யார்' என்ற எண்ணத்தில், எதையும் அறியாமல் இருந்துவிடுவார்கள்.

இன்று தகவல் தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டது. இணையத்தில் எல்லா விடயங்களையும் தேடிப்பெறலாம். எனினும் தேவையான விடயங்களை நோக்காது, கண்டதையும் தேடக்கூடாது. அநாவசிய தகவல்கள், விளையாட்டுகள் என இளைஞர்-யுவதிகளைக் குழப்பிவிடுகின்றன.

அறிவைத்தேட முயற்சி செய்ய வேண்டும். கல்வி கற்றல் முறைகளில் பல வசதிகள் ஏற்பட்டுள்ளன. வெளிநாடு செல்லாமலேயே, அந்த நாடுகளின் கல்விச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். முழு உலகத்தவர்களும் கல்விப் பயணத்தில் சலிப்பின்றி இயங்குதல் சிறப்பு.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

பெண் தலைமைத்துவக் குடும்பங்களின்

### நலிவுத் தன்மைகளை விளங்கி உதவுதல்

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு போர் காரணமாக, அதிக பாதிப்புகளை எதிர்கொண்ட சமூகமாக, பெண்தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளன.

பலவித நெருக்குதல்களிலிருந்து இவர்களைப் பாதுகாப்பதற்கு, பொருளாதார ரீதியில் முன்னேற்ற வேண்டிய கடப்பாடு ஒவ்வொருவருக்கும் காணப்படுகின்றது. அவர்களது, இந்த நிலைகளில் இருந்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணப்பாடு, ஒவ்வொருவரிடத்திலும் வளர வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 9,052 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக, வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு நகர் ஆகிய இடங்களில் அதிகளவான பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வாழ்கின்றன.

கடந்த 10 ஆண்டுகளில், பெண் தலைமைத்துவ குடும்பங்கள், சுயமாகத் தங்களது சொந்தக்காலில் நிற்கக் கூடிய வகையில், பொருளாதாரக் கட்டமைப்பை ஏற்படுத்தும் பல்வேறு தொழில் முயற்சிகளை எடுத்து இருக்கின்றன. குறிப்பாக, ஆடை உற்பத்தி, உலர் உணவுப் பொருட்கள் உற்பத்தி, காளான், கோழி, கால்நடை வளர்ப்பு, பனைசார் உற்பத்திகள் போன்ற சில செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், இவற்றுக்குரிய சந்தை வாய்ப்பு கிடைக்கின்றதா என்பது பெரும் கேள்விக்குறியாகக் காணப்படுகின்றது.

ஆகவே, பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு, அவர்களது நலிவு தன்மைகளை விளங்கிக் கொண்டு, நேர்த்தியான திட்டமிடல்கள் அவசியமாகின்றன. வெறும் வாழ்வாதார உதவிகளை வழங்குவதை விடுத்து, அவர்களுடைய பிரச்சினைகள், குறைபாடுகள் என்பவற்றை முழுமையாக ஆராய்ந்து, அவர்களுக்கு உதவும் வகையில் உதவிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

–யது பாஸ்கரன்

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

# 207 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளன

2003ஆம் ஆண்டு மீண்டும் தொழிற்றுறையால் அமைக்கப்பட்ட தன்னார்வப் பொறிமுறையின் கீழ், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு (PCCSL) 76 முறைப்பாடுகளை தீர்ப்பதற்காக கடந்த ஆண்டு பாதிக்கப்பட்ட வாசகர்களிடமிருந்து நேரடியாக 207 முறைப்பாடுகளை சுய ஒழுங்குமுறை அடிப்படையில் தீர்த்துள்ளது.

2020 ஆம் ஆண்டிற்கான இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையை அதன் பிரதான நிறைவேற்று அதிகாரி சுகுமார் ரொக்வூட், கடந்த வாரம் இடம்பெற்ற ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் வெளியிட்டார்.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு 60 வெளியீட்டாளர்கள், பத்திரிகையாசிரியர்கள், ஊடகவியலாளர்களுடனான 15 கூட்டங்களை கொவிட்-19 முடக்க காலங்களின் போதும் நடத்தியிருந்தது.

203 சிவில் சமூக உறுப்பினர்களிற்கான 9 விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன. இணையவழிக் கலந்தரையாடலின் ஊடாக 105 ஊடகவியல் மாணவர்களுடனான சந்திப்புகள் 11 தடவைகள் இடம்பெற்றதோடு 122 இளைஞர்களுக்கான 3 நிகழ்ச்சிகளும் இடம்பெற்றிருந்தன.

அச்சு ஊடகத்துக்கான ஒரு சுயாதீனமான, தன்னார்வ, சுய ஒழுங்குமுறை அமைப்பான இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அதன் 18 ஆவது ஆண்டு நிறைவினை ஒக்டோபர் 15, 2021 அன்று கொண்டாடியது.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவானது இலங்கை பத்திரிகை வெளியீட்டாளர் சங்கம் (NSSL), இலங்கை பத்திரிகையாசிரியர் சங்கம் (TEGOSL), சுதந்திர ஊடக இயக்கம் (FMM), உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் ஆகிய அமைப்புகளை துணை அமைப்புகளாகவும் ஊடக ஊழியர்கள் தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை முஸ்லிம் மீடியா போரம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், தெற்காசிய சுதந்திர ஊடக சங்கம் - இலங்கைக்கான பிரிவு ஆகியவற்றுடன் இணைந்த அமைப்பாகவும் காணப்படுகின்றது.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அதன் செயலகம் மற்றும் முரண்பாடு தீர்ப்புச் சபை (DRC) ஊடாக நல்லிணக்கம், மத்தியஸ்தம் மற்றும் நடுவர் கொள்கைகளில் செயற்படுகின்றது. முரண்பாடு தீர்ப்புச் சபையானது 5 ஊடகவியலாளர்கள் மற்றும் தலைவர் உட்பட ஊடகவியலாளர்கள் அல்லாத அறுவரைக் கொண்டுள்ளது.

இதற்கு பாராளுமன்றத்தின் முன்னாள் செயலாளர் நாயகம் நிஹால் செனவிரத்ன தலைவராக இருக்கின்றார். ஊடகவியலாளர்கள் அல்லாத உறுப்பினர்களாக கலாநிதி தேவநேசன் நேசையா, ஜாவிட் யூசுப், டயோன் ஸ்கூர்மன், லுசில் விஜேவர்தன, திருமதி ஞானா முணசிங்க ஆகியோரும் ஊடகவியலாளர்களான சிறி ரணசிங்க, பி.பாலசிங்கம், தயா லங்காபுர, பிரமோத் டி சில்வா, திருமதி ரஜிதா வீரகோன் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

பணிப்பாளர் சபையானது, குமார் நடேசன் (தலைவர்), சிங்ஹ ரட்ணதுங்க (துணைத் தலைவர்), நிமால் வெல்கம, மனிக் டி சில்வா, லசந்த டி சில்வா, பிராங்க் டி சொய்சா, தர்மன் விக்கிரமரத்ன, என்.எம். அமீன், மோகன்லால் பியதாஸ ஆகிய 9 உறுப்பினர்களை பணிப்பாளர்களாக கொண்டுள்ளது.

இணையவழியினூடாக நடைபெற்ற இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் வருடாந்த பொதுக் கூட்டத்தின் போது இலங்கை, *Ernest and Young* நிறுவனம் கணக்காளர்களாகவும் *F.J. & G de Saram's Corporate Services (Private) Limited (CSL)* நிறுவனம் நிறுவனச் செயலாளர்களாகவும் மீண்டும் நியமிக்கப்பட்டனர்.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் சிங்கள முறைப்பாட்டு அலுவலகராக கமல் லியனாராய்ச்சி பணியாற்றுகின்றார்.

புதுடெல்லி

மேலும் ஆறு கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை

# விவசாயிகளின் போராட்டம் தொடரும்



விவசாயிகளின் மேலும் ஆறு கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை போராட்டம் தொடருமென கூட்டமொன்றில் உரையாற்றிய விவசாய சங்க தலைவர் ராகேஷ் ராகேஷ் திகாயத் தெரிவித்துள்ளார்.

சமயத் கிஷான் மோர்ச்சா (எஸ்கேஎம்) அமைப்பு நடத்திய மகா பஞ்சாயத் நிகழ்ச்சியில் பாரதிய கிசான் யூனியன் தலைவர் ராகேஷ் ராகேஷ் திகாயத் உரையாற்றினார். குறைந்தபட்ச விவசாயிகள் ஆதரவு விலை (எம்எஸ்பி) குறித்து பிரதமர் மோடி நியாயமான விளக்கம் அளிக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பயிர்களுக்கு இந்த குறைந்தபட்ச நியாயவிலை மத்திய அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலன் கருதி இந்த விலையை அதிகரிக்க ராகேஷ் டிக்கெட் உள்ளிட்ட பலர் வலியுறுத்தி வருகின்றனர்.

பிரதமர் மோடி, குஜராத்தின் முதலமைச்சராக பதவி வகித்த காலகட்டத்தில் விவசாயிகளின் நலன் கருதி இதனை அதிகரிப்பதாக கூறியதாக ராகேஷ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துப் பேசிய ராகேஷ், விவசாயிகள் தங்களது மொழியில் இதனை அரசியல் தலைவர்களுக்கு விளக்கம் கேட்டதாகவும் ஆனால், புதுடெல்லியில் சொகுசு கட்டடங்களில் அமர்ந்திருக்கும் அரசியல் தலைவர்களுக்கு விவசாயிகளின் மொழி புரியாமல் அவர்களது மொழியில் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் விமர்சனத்தை முன்வைத்துள்ளார். பிரதமர் மோடி, விவசாயிகளிடம் மன்னிப்பு கேட்டதை சுட்டிக்காட்டிய ராகேஷ், மத்திய அரசுதான் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்வந்திருக்கிறதே தவிர விவசாயிகள் இன்னும் முன்வரவில்லை என்று கூறியுள்ளார்.

புதுச்சேரி

சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட வழக்கில்

## படைவீரர், கணக்காளர் கைது



மசாஜ் நிலையத்தில் சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட வழக்கில், கடலோர படை வீரர், கணக்காளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். புதுச்சேரி, அண்ணா நகர் மசாஜ் நிலையத்தில், 17 வயது சிறுமி மீட்கப்பட்டார்.

மசாஜ் நிலையத்துக்கு வந்து சென்ற 40 பேர், சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்தது தெரியவந்தது. உருளையன்பேட்டை பொலிஸார் 40 பேரை அடையாளம் கண்டு, 'போக்சோ' பிரிவின் கீழ் வழக்கு பதிந்தனர்.

சென்னை, இராமாபுரம் விக்னேஷ், புதுச்சேரி கொட்டுப் பாளையம் அருண், திருவள்ளுவர் நகர் பூபதி, விழுப்புரம் தேவநாதன், கண்டரக் கோட்டை சீனுவாசன் ஆகிய 5 பேர் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில், இவ்வழக்கில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

மும்பை

## நடிகை கங்கனா மீது வழக்கு தொடருமாறு கோரிக்கை



சீக்கியரைப் புண்படுத்தும் வகையில் கருத்து தெரிவித்துள்ள பொலிவுட் நடிகை கங்கனா ரணாவத் மீது வழக்குப் பதிவு செய்யக் கோரி, மும்பை பொலிஸில் சீக்கிய அமைப்பு பிரதிநிதிகள் புகார் அளித்துள்ளனர்.

விவசாயச் சட்டங்களை எதிர்த்து பஞ்சாப் உள்ளிட்ட சில மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள், புதுடெல்லி எல்லையில் போராட்டம் நடத்தி வருகின்றனர். இச்சட்டங்களை திரும்பப் பெறுவதாக பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில் அறிவித்திருந்தார்.

இதன்போது, பொலிவுட் நடிகை கங்கனா, சீக்கியர்களுக்கு எதிராக சில கருத்துகளை கூறியிருந்தார். இதற்கு, பல சீக்கிய அமைப்புகள் கண்டனம் தெரிவித்திருந்தன.

இந்நிலையில் புதுடெல்லி சீக்கிய குருத்வாரா நிர்வாகக் குழுவினர், மஹாராஷ்டிர மாநிலம் மும்பை பொலிஸில் புகார் கொடுத்தனர். அகாலி தள மூத்த தலைவரான மஜிந்தர் சிங் சிர்சா தலைமையிலான குழுவினர் அளித்துள்ள புகாரில் கூறப்பட்டுள்ளதாவது: விவசாய போராட்டத்தை காலிஸ்தான் பயங்கரவாத அமைப்புடன் ஒப்பிட்டு கங்கனா பேசியுள்ளார்.

மேலும் சீக்கியர்களை இழிவுபடுத்தும் வகையில் பல கருத்துகளை கூறியுள்ளார். இது, உலகெங்கும் உள்ள சீக்கிய மக்களின் மனதை புண்படுத்தும் வகையில் உள்ளது. எதிர்காலத்தில் இதுபோல் எந்த ஒரு மதத்தினருக்கும் எதிராக கருத்து தெரிவிக்காத வகையில், அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு புகாரில் கூறப்பட்டுள்ளது.

புதுடெல்லி

'எவரெஸ்ட்' அடித்தள முகாமை அடைந்த

## நான்கு வயது சிறுவன் சாதனை



'எவரெஸ்ட்' மலையின் அடித்தள முகாமை அடைந்த, மிகக் குறைந்த வயது ஆசிய நபர் என்ற பெருமையை, 4 வயது இந்திய சிறுவன் பெற்றுள்ளான்.

ஐக்கிய அரபு எமிரேட்சின் அபுதாபியில், ஸ்வேதா கோலேச்சா - கவுரவ் கோலேச்சா என்ற இந்திய வம்சாவளி தம்பதியினர் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு அத்வித் என்ற 4 வயது மகன் உள்ளார். மலையேறும் பயிற்சிகளை அத்வித்துக்கு அளிக்க முடிவு செய்த ஸ்வேதா, அவர் நடக்கத் தொடங்கிய நாள் முதல், அதற்கான பயிற்சிகளை அளித்து வந்தார்.

அபுதாபியில் 15ஆவது மாடியில் உள்ள தங்கள் வீட்டிற்கு செல்ல, படியில் ஏற வைத்து பயிற்சிகளை தொடங்கி உள்ளார். இப்படி தொடர் பயிற்சிகளை மேற்கொண்டு வந்த அத்வித், தற்போது உலகின் மிக உயரமான எவரெஸ்ட் மலையின் அடித்தள முகாமை அடைந்து சாதனை படைத்துள்ளார்.

தன் தாய் ஸ்வேதா, மாமா சவுரப் சுக்கானியுடன், கடந்த ஒக்டோபர் 28 ஆம் திகதி மலையேறத் தொடங்கிய அத்வித், கடந்த 6 ஆம் திகதி 5,364 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள அடித்தள முகாமை அடைந்தார். இதன் வாயிலாக, ஆசியாவில் இருந்து, எவரெஸ்ட் அடித்தள முகாமை அடைந்த மிகக் குறைந்த வயது நபர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.

போபால்

## நடனமாடினார் மாநில முதலமைச்சர்



மத்திய பிரதேச மாநில முதலமைச்சர் சிவராஜ் சிங் சௌகான், பழங்குடியின மக்களுடன் சேர்ந்து நடனமாடியுள்ளார்.

மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள பட்டியலின பழங்குடியின மக்கள் அதிகம் வாழும் பகுதியாகும். அங்கு நடைபெற்ற ஜனஜாதிய கவுரவ் திவாஸ் விழாவில் அம்மாநில முதலமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் கலந்துகொண்டார். ஒரு வாரம் நடைபெறும் இந்த விழாவானது கடந்த 15ஆம் திகதி தொடங்கியது.

இந்த விழா பழங்குடியின மக்களின் தலைவரும் சுதந்திர போராட்ட வீரருமான பீர்சா முண்டாவின் நினைவாக கொண்டாடப்படுகிறது. இந்த விழாவில் பங்கேற்ற முதலமைச்சர் சவுகான் பழங்குடியின மக்களுடன் சேர்ந்து நடனம் ஆடியுள்ளார். அந்த வீடியோ தற்போது வைரலாகியுள்ளது.

பாலக்காடு

## ஆர்.எஸ்.எஸ் தொண்டர் மீது அரிவாள் வெட்டு




கேரளாவில் மனைவி கண் எதிரே கொல்லப்பட்ட ஆர்.எஸ்.எஸ் தொண்டர் சஞ்சித் கொலை வழக்கில் பயங்கரவாத அமைப்பை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். இதேவேளை, அவரது பெயர், விவரத்தை பொலிஸார் வெளியிடவில்லை.

பாலக்காடு, எடுப்புக்குளம் பகுதியை சேர்ந்த ஆர்.எஸ்.எஸ் பொறுப்பாளர், கடந்த நவம்பர் மாதம் 15ஆம் திகதி தனது மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது காரில் வந்த மர்மக் கும்பல் இவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது.

தொடர்ந்து காரில் வந்த நபர்கள், ஆர்.எஸ்.எஸ் பொறுப்பாளரை சரமாரியாக வெட்டினார்கள். 30க்கும் மேற்பட்ட அரிவாள் வெட்டு, கத்திக்குத்து விழுந்தன. அவரின் மனைவி கண்முன்னே உயிர் பிரிந்தது. கொலையை கண்டித்து மலப்புல்லாவில் அளவில் முழு அடைப்பும் நடந்தது.

இந்தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இது தொடர்பாக ஆர்.எஸ்.எஸ், பாரதிய ஜனதா ஆகிய கட்சிகளின் நிர்வாகிகள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர். குற்றவாளிகளைப் பிடிப்பதில் மாநில அரசாங்கம் சுணக்கம் காட்டுவதாகவும் நேர்மையான விசாரணை கோரியும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு பாரதிய ஜனதா கட்சியினர் கடிதம் எழுதினர். இதனை தொடர்ந்து, மாநில பொலிஸார் தீவிரமாக விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

சென்னை

மனைவியைக் கழுத்து நெரித்து கொலை செய்து,

## தப்பியோடியவர் மாட்டினார்




கள்ளக்காதல் விவகாரத்தில் மனைவியைக் கழுத்து நெரித்து கொலை செய்து, மேற்கு வங்கத்துக்கு தப்பிய கணவரை பொலிஸார் கைது செய்தனர்.

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் அடுத்த, அனுப்பம்பட்டு ரயில் நிலையம் அருகே, கடந்த, 13ஆம் திகதி பெண் ஒருவர் கழுத்து நெரிக்கப்பட்டு கொலையுண்டு கிடந்தார். பொலிஸார் சடலத்தை மீட்டு விசாரணை மேற்கொண்டதில், மீஞ்சூர் அடுத்த, மேலுார் கிராமத்தை சேர்ந்தவர் எனத் தெரிய வந்தது. கட்டட தொழிலாளியான இவர், தன்னுடன் வேலை பார்த்து வந்த மேற்குவங்க மாநிலத்தை சேர்ந்தவரைக், காதலித்து ஒராண்டுக்கு முன் திருமணம் செய்துள்ளார்.

கடந்த, 12ஆம் திகதி வேலைக்கு செல்வதாக கூறி இருவரும் சென்ற நிலையில், அடுத்த நாள், மனைவி கொலை செய்யப்பட்டு சடலமாக கண்டெடுக்கப்பட்டார். மனைவியை கொலை செய்துவிட்டு, கள்ளக் கணவன் மேற்கு வங்கம் மாநிலத்துக்கு தப்பியது விசாரணையில் தெரிய வந்தது.

அதை தொடர்ந்து தனிப்படை பொலிஸார், மேற்கு வங்கம் சென்று, கள்ளக் கணவனைக் கைது செய்து, பொன்னேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர். மனைவி வேறு ஒருவருடன் கள்ளத்தொடர்பு வைத்திருந்ததாகவும், அவர் அடிக்கடி கள்ளக் காதலனுடன் மொபைல் போனில் பேசியதை கண்டித்தும், அதை கேட்காததால், ஆத்திரத்தில் கொலை செய்ததாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.




மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# முன்னிலையில் இலங்கை

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் முன்னிலையில் இலங்கை காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில், காலியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த இந்த டெஸ்டின் நேற்றைய மூன்றாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுகளை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள், ஜேஸன் ஹோல்டர், கைல் மேயர்ஸின் இணைப்பாட்டத்தில் தமது இனிங்ஸை நகர்த்தியது. இந்நிலையில், 45 ஓட்டங்களுடன் தனஞ்சய டி சில்வாவிடம் மேயர்ஸ் வீழ்ந்ததோடு, குறிப்பிட்ட நேரத்தில் 36 ஓட்டங்களுடன் ஹோல்டரும் பிரவீன் ஜெயவிக்கிரமவிடம் வீழ்ந்தனர். பின்னர் ரஹீம் கொர்ன்வோல் பெற்ற ஓட்டங்கள் காரணமாக பொலோ ஒன்னை மேற்கிந்தியத் தீவுகள் தவிர்த்த நிலையில், 39 ஓட்டங்களுடன் சுரங்க லக்மாலிடம் கொர்ன்வோல் வீழ்ந்தார். மழை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்ட நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 224 ஓட்டங்களை மேற்கிந்தியத் தீவுகள் பெற்றுள்ளது.

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளன

# சிறந்த வீரருக்கான விருது பட்டியலில் ரொனால்டோ

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் 2020-21 பருவகாலத்துக்கான சிறந்த வீரர் விருதுப் பட்டியலில், பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரர் லியனல் மெஸ்ஸி, இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்களவீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆகியோருடன் கடந்தாண்டு வெற்றியாளரான றொபேர்ட் லெவன்டோஸ்கியும் இடம்பெற்றுள்ளார்.



இதேவேளை, இப்பட்டியலில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான மொஹமட் சாலா, பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரர்களான கிலியான் மப்பே மற்றும் நெய்மர், ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்டின் முன்களவீரரான எர்லிங்க் ஹலான்ட், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் மத்தியகளவீரரான கெவின் டி ப்ரூனே, ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட்டின் முன்களவீரரான கரிம் பென்ஸீமா, இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சியின் மத்தியகளவீரர்களான ஜோர்ஜினியோ, என்கலோ கன்டே ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

சிறந்த கோல் காப்பாளருக்கான பட்டியலில் பரிஸ் ஸா ஜெர்மைனின் ஜல்லூயிஜி டொன்னருமா இடம்பெற்றுள்ளார்.

சிறந்த பயிற்சியாளருக்கான பட்டியலில், இத்தாலிய சர்வதேச கால்பந்தாட்ட அணியின் றொபேர்ட் மன்சினி, செல்சியின் தோமஸ் துஷெல், ஆர்ஜென்டீனாவின் லியனல் ஸ்கலோனி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது டெஸ்டுக்கான

# பங்களாதேஷ் குழாம் அறிவிப்பு

பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது டெஸ்டுக்கான பங்களாதேஷ் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், புதுமுகங்களாக துடுப்பாட்டவீரர் மஹ்முடுல் ஹஸன் றோய், வேகப்பந்துவீச்சாளர் றெஜவுர் ரஹ்மான் ரஜா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்நிலையில், காயம் காரணமாக தமிம் இக்பால், தஸ்கின் அஹ்மட், ஷொரிஃபுல் இஸ்லாம் ஆகியோர் இடம்பெறவில்லை.

இந்நிலையில், ஷகிப் அல் ஹஸன் குழாமில் இடம்பெற்றுள்ளபோதும், உடற்றகுதியில் தேறினாலேயே அவர் விளையாடுவார்.



குழாம்: மொமினுல் ஹக் (அணித்தலைவர்), ஷட்மான் இஸ்லாம், சைஃப் ஹஸன், நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ, முஷ்பிக்கூர் ரஹீம், லிட்டன் தாஸ், நுருல் ஹஸன், மெஹிடி ஹஸன் மிராஸ், நயீம் ஹஸன், தஜியுல் இஸ்லாம், எபடொட் ஹொஸைன், அபு ஜயெட், யாசீர் அலி, மஹ்முடுல் ஹஸன் ஜோய், றெஜவுர் ரஹ்மான் ரஜா, ஷகிப் அல் ஹஸன்.

பல்கேரியா

# பஸ் தீப்பற்றி எரிந்ததில் 45 பேர் உயிரிழப்பு





பல்கேரியாவில், பயணிகள் பஸ் ஒன்று தீப்பற்றி எரிந்ததில் 45 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

நேன்றைய தினம்(23) அதிகாலை 2 மணியளவில் துருக்கியில் இருந்து வடக்கு மசிடோனியா நோக்கி பல்கேரியா வழியாக பயணித்த பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

12 குழந்தைகள் உட்பட 50 க்கும் மேற்பட்டோர் பயணித்த இப்பஸ்ஸில் தீயில் கருகி 45 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 7 பேர் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் இவ்விபத்தானது எவ்வாறு இடம்பெற்றது என்பது குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

பிரித்தானியா

# இனிமேல் ஒவ்வொரு வீடுகளிலும் இது கட்டாயம்

சூழல் மாசடைவதைத் தடுக்கும் விதமாகவும், எரிபொருள் செலவைக் குறைக்கும் விதமாகவும் பிரித்தானியாவில் 2030 ஆம் ஆண்டிலிருந்து பெட்ரோல், டீசலால் இயங்கும் வாகனங்களுக்கு தடை விதிக்கப்படும் என அந் நாட்டுப் பிரதமர் போரிஸ் ஜோன்சன் கடந்த வருடம் தெரிவித்திருந்தார்.

மேலும் அதற்கு பதிலாக மின்சாரத்தால் இயங்கும் வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்க பல நடவடிக்கைகளை



முன்னெடுத்து வருகிறார்.

அந்தவகையில் நாடு முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் 145,000 மின்னேற்றும் பகுதி நிறுவப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 2022ஆம் ஆண்டு முதல் புதிதாகக் கட்டப்படும் வீடுகள், கட்டடங்களில், மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றும் பகுதி கட்டமைப்பது கட்டாயமாக்கப்படும் என அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

மேலும் வேகமான மற்றும் விரைவான கட்டண புள்ளிகளும், பணம் செலுத்துவதற்கான எளிய வழிகளும் அறிமுகப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனா

# உணவருந்த தடை விதித்த உணவகம்

யூடியூப் பிரபலம் ஒருவருக்கு உணவகம் ஒன்று தனது உணவகத்தில் உண்ணுவதற்குத் தடை விதித்துள்ள விநோத சம்பவம் சீனாவில் இடம்பெற்றுள்ளது.

சீனாவில் உள்ள ஷாங்ஷா என்ற இடத்தை சேர்ந்தவர் ஹாங். யூடியூப் பிரபலமான இவர் அதிகமாக உண்ணும் பழக்கம் உடையவர் என்பதால் தான் உண்ணுவதை வீடியோ எடுத்து தனது யூடியூப் பக்கத்தில் பதிவேற்றி வருகின்றார்.

இந்நிலையில் அவர் வழமையாக செல்லும் பிரபல உணவகமொன்று அவரை அங்கு



உணவருந்த வரவேண்டாம் என உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து அவ்வுணவகத்தின் உரிமையாளர் கருத்துத் தெரிவிக்கையில், "ஹாங் அதிகளவில் உண்பதால் நாங்கள் தயார் செய்து வைத்திருக்கும் உணவின் பெரும் பகுதி முடிவடைந்து விடுகின்றது. வாடிக்கையாளர்களுக்கு எங்களால் உணவு வழங்க முடியவில்லை. எனவே தான் அவர் இங்கு உணவருந்தத் தடை விதித்துள்ளோம்" என்றார்.

இந்நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவித்த ஹாங் "என்னை உணவகத்துக்குள் அனுமதிக்காதது தவறு. என்னால் அதிக உணவு சாப்பிட முடிகிறது. இதில் என்ன தவறு இருக்கிறது? நான் எந்த உணவையும் வீணாக்கவில்லை. என்னை உணவக நிர்வாகம் பாரபட்சத்துடன் நடத்துகிறது" என்றார்.


அமெரிக்கா


# யுவதியின் வயிற்றில் கேட்ட இசை

யுவதியின் வயிற்றில் இருந்து பாடல் ஒலித்த விநோத சம்பவம் அமெரிக்காவில் இடம் பெற்றுள்ளது.

அமெரிக்காவின் மசாசூசெட்ஸில் வசித்து வருபவர் கார்லி. இவர் அண்மையில் உடல் சுகவீனமுற்ற காரணத்தால் வலி நிவாரணிகளை உட்கொண்டு வந்துள்ளார்.

இந்நிலையில் வலி நிவாரணியை விழுங்குவதாக எண்ணி ஹெட்ஃபோனை (Headphone) விழுங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





எனினும் தான் ஹெட்ஃபோனை விழுங்கியதை அறிந்திருக்கவில்லை எனவும் பாடல் கேட்க ஹெட்ஃ போனை தேடிய போதே தனது வயிற்றில் இருந்து விநோத சத்தம் கேட்டதாகவும் அதன் பின்னரே தான் நிலைமையை அறிந்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் "அறுவை சிகிச்சை மூலம் ஹெட்ஃபோனை வெளியே எடுக்க வேண்டியிருக்கும் என்ற அச்சத்துடன் இருந்த எனக்கு அது மறுநாள் மலத்துடன் வெளியேறியமை இன்பமான அதிர்ச்சியாக இருந்தது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.







அமெரிக்கா

# வீதியில் பொழிந்த பண மழை

அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள நெடுஞ்சாலையொன்றில் நேற்று முன்தினம் (21) பயணித்த பணம் நிரப்பப்பட்ட கனரக வாகனமொன்று விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் குறித்த கனரக வாகனத்துக்குள் இருந்த நாயணத்தாள்கள் சிதறி காற்றில் பறக்கத் தொங்கின.

இதனை சற்றும் எதிர்பாராத அப்பகுதியில் பயணித்த வாகன சாரதிகள் தமது வாகனத்தை நிறுத்திவிட்டு நாணயத்தாள்களை அள்ளிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், பணத்தை எடுத்துக் கொண்டிருந்தவர்களிடம், அதனைத் திருப்பி அளிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பலர் பணத்தை திருப்பி அளித்த போதும் சிலர் அதனை எடுத்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 24 நவம்பர் 2021, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.